ஸ்பெஷல், நட்ஸ், வனிலா
புருட்சலட் ஐஸ்கிறீம், கிறீம்
சர்பத் ஆகியவற்றைச்
சுவைத்து மகிழ்ந்திட
ராஜா குளிர்
சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/538)

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

தரமான சுவையான
ஐஸ்கிறீம், குளிர்பானங்கள்
மற்றும்
சிற்றுண்டி வகைகளை
புசித்து இன்புற
ராஜா குளிர்
சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/538)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 16 வியாழக்கிழமை (30 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 123

## அமைதி முயற்சிக்கு அயல் நாடுகளின் ஆதரவு உந்துசக்தியாக இருக்கும்

### டாக்காவில் ஜனாதிபதி சந்திரிகா

டாக்கா, மார்ச். 30

இலங்கை அரசாங்கத்தின் அமைதி முயற்சிகளுக்கு அனைத்துலக ஆதரவு தொடர்ந்தும் தேவைப்படுகிறது. குறிப்பாக அண்டை நாடுகளின் ஆதரவு அமைதி முயற்சிக்கு உந்து சக்தியாக இருக்கும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க பங்களாதேஷ் தலை நகர் டாக்காவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவது மிகவும் சிரமமான பணி என்று குறிப்பிட்டார்.

ஜனாதிபதிசந்திரிகா நேற்று பங்களாதேஷ் பிரதமர் காலிதா ஸியாவுடன் இருதரப்பு வர்த்தக, பொருளாதார உறவுகள் குறித்து விரிவாக பேச்சு நடத்தினார். இரு தலைவர்களும் சுமார் ஒரு மணி நேரம் வரை பேச்சு வார்த்தை நடத்தினர்.

பங்களாதேஷ் நாட்டு அரசியல் தலைவர்களுடன் சந்திரிகா தொடர்ந்து பேச்சுக்கள் நடத்த உள்ளார்.

பங்களாதேஷ் விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா இன்று கொழும்பு திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-4-6]

### மூச்சந்தி முரளி



அப்ப வாத்திமாரின்ரை சம்பளத்தையும் கூட்டி, வேலையையும் கூட்ட திட்டம் போட்டிருக்கினம் போலை...!

## சமாதானப் பேச்சை மீள ஆரம்பிக்க இரு தரப்பினரும் உதவ வேண்டும்

### ஜப்பான் வற்புறுத்து

கொழும்பு, மார்ச் 30

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வைக்காண முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பமாகும் என்று ஜப்பான் அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தற்சமயம் தடைப்பட்டுப் போயுள்ள பேச்சுக்களை மீள ஆரம்பிக்க இருதரப்பும் உதவவேண்டும் என்றும் என்று ஜப்பான் அரசு கேட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு மத்தியஸ்தம் வகிக்க தமது நாடு தயாராகவிருப்பதாகவும் —

புனர்வாழ்வு வேலைகளுக்கு நிதி வழங்க முடியும் என்றும் — ஜப்பான் அரசு முன்னர் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

### பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, மார்ச். 30

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செய்தி வெளியிட்டதாகக் கூறப்படும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் சிங்கரட்ணதுங்கா மீது நேற்று வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

அவரை முன் பிணையாக 2 ஆயிரம் ரூபா செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (ஒ-4)

# அரசு - புலிகள் பேச்சுகள் வரும் திங்கள், செவ்வாயில்

## சந்திரிகா இன்று நாடு திரும்பியதும் யாழ். வரும் பிரதிநிதிகள் தெரிவு

கொழும்பு, மார்ச் 30

ஸ்ரீலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கும் இடையில் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் (3, 4 ஆம் திகதிகளில்) யாழ்ப்பாணத்தில் பேச்சுக்கள் இடம் பெறும் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பங்களா தேசிலிருந்து இன்று கொழும்பு திரும்பியதும், யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பேச்சுக்கள் எதிர்வரும் 3, 4 ஆம் திகதிகளில் இரு நாட்கள் நடைபெறும் என்ற தகவலை "த ஐலண்ட்" பத்திரிகை வெளியிட்டது.

இதேவேளை —

இந்தியா மற்றும் பங்களா தேஷ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி சந்திரிகா இன்று நாடு திரும்பிய பின்னரே பேச்சுக்கான திகதி பற்றி முடிவு செய்யப்படும் என்றும் —

இந்தப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறுகின்றன என்றும் —

அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டிருந்தன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வீடுகளில் உணவுப்பொருள்கள் தேடி

## மட்டக்களப்புப் பகுதியில் படையினர் சுற்றிவளைப்பு

கொழும்பு, மார்ச். 30

மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளை நேற்று முன் தினம் சுற்றி வளைத்த படையினர் வீடுகளின் மூலை முடுக்குகளில் உணவுப் பொருள்கள் மறைந்து வைக்கப்பட்டிருக்கின்றனவா என்று தேடுதல் நடத்தினர்.

மாமாங்கம், கூழாவடி கொலனி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளிலேயே படையினர் இப்படி உணவுப் பொருள்களைத் தேடி சுற்றிவளைப்பு நடத்தினர்.

கடந்த காலங்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சுற்றி வளைக்கும் படையினர் ஆட்களை தேடுவதே வழக்கம். (ஒ-3)

## மன்னார் பேசாலையிலும் ஞாயிறன்று தேடுதல்

கொழும்பு, மார்ச் 30

மன்னார்தீவில் பேசாலைப் பகுதியை கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

பேசாலையில் 4 ஆம் வட்டாரம், ஹெலி பகுதிகளையே படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் இம்முறையே படையினர் அங்கு தேடுதல் நடத்தினர் என்றும் —

தேடுதலுக்கான காரணம் தெரியவில்லை என்றும் — அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. [ஒ-3]

## யாழ். விவசாயிகளுக்கும் உர மானியம் கிடைக்கும்

கொழும்பு, மார்ச் 30

அரசாங்கம் அறிவித்துள்ள உரமானியம் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கும் கிடைக்க விவசாய சேவைத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்போது பதிவு செய்யப்பட்ட நான்காயிரம் விவசாயிகள் இருப்பதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு விவசாயிக்கும் 700 ரூபா உரமானியம் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளன. (ஒ-4)

## பாடசாலை நாள்கள் ஜனவரி முதல் அதிகரிக்கும்

கொழும்பு, மார்ச் 30

புதிய ஆசிரிய சேவைத்திட்டத்தின் கீழ் பாடசாலை நாள்களின் எண்ணிக்கை எதிர்வரும் ஜனவரி முதல் 180 இலிருந்து 200 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

பாடசாலை இயங்கும் நேரமும் காலை 7-30 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு — கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர் எஸ். நவரத்தினராசா தெரிவித்தார்.

அமுல் செய்யப்படவுள்ள புதிய ஆசிரிய சேவைத் திட்டத்தின் கீழ், ஜப்பானில் அமுல் செய்யப்பட்டு வரும் சில கல்வி நடைமுறைகளும் அடங்குகின்றன. ஜப்பான் நாட்டில் பாடசாலை நடைபெறும் நாள்கள் 240 ஆகும். இதனடிப்படையிலேயே இந்த மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

மேலும் பாட ஆயத்தங்களை பாடசாலையிலேயே மேற்கொள்ள வேண்டும் என்றும் வீடுகளில் பாட ஆயத்தங்களை மேற்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-30 மணிக்கு பாடபோதனை முடிவடைந்தாலும் கூட, ஆசிரியர் பி. ப. மூன்று மணி வரை பணியாற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14)

### பல்கலைக்கழக அனுமதி:

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவுவதில் வாசுதேவ தீவிரம்

கொழும்பு, மார்ச் 30

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்டுள்ள யாழ். மாணவர்களுக்கு உதவுவதில் இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா முன்னின்று உழைக்கிறார்.

பாதிக்கப்பட்டுள்ள யாழ். மாணவர்களுக்கு நிவாரணம் பெற்றுத் தரும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகச் சம்பந்தப்பட்ட மாணவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

கொழும்பு வந்துள்ள பாதிக்கப்பட்ட மாணவர் குழுப் பிரதிநிதிகள் வாசுதேவவைச் சந்தித்து தமது நிலையை எடுத்து விளக்கினர்.

இதற்கு பரிகாரம் காண தம்மால் முடிந்தளவு உதவுவதாகக் கூறிய வாசுதேவ கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவுடன் இது தொடர்பாக பேசியதுடன் —

மாணவர் குழுவினர் அமைச்சரைச் சந்திக்க ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.

இதே வேளை பாதிக்கப்பட்ட மாணவர் குழு கொழும்பு மேயர் கே. கணேசலிங்கத்தையும் சந்தித்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாணவரை சந்திக்க மறுத்து விட்டார் சிறிமா!

கொழும்பு, மார்ச் 30

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட யாழ். மாணவர்களின் பிரதிநிதிகளைச் சந்திக்க பிரதமர் சிறிமாவோபண்டாரநாயக்கா இறுதிநேரத்தில் மறுத்து விட்டார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் சார்பில் கொழும்பு சென்றுள்ள குழு பிரதமரைச் சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டதாகவும் —

அதற்கு இணங்கி மாணவர்களைச் சந்திப்பதற்கு இம்மாதம் 20 ஆம் திகதி நேரம் ஒதுக்கிக் கொடுத்தார் பிரதமர்.

ஆனால் இறுதி நேரத்தில் யாழ்ப்பாண மாணவர்களை தாம் சந்திக்க முடியாது என்றும், வேறு அலுவல் இருப்பதாகவும் கூறி அவர்களுக்கு ஏமாற்றத்தை உண்டாக்கினார். [அ-9]

### சமாதானத் தீர்வு காணப்பட்டால்

# இலங்கைக்கு உதவும் நாடுகள் இவ்வருடம் 2 ஆம் தடவையும் கூடும்

கொழும்பு, மார்ச் 30

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்று காணப்பட்டால்—

இலங்கையின் புனரமைப்புக்கு உதவுவது குறித்து ஆராய்வதற்காக இந்த ஆண்டில் மற்றும் ஒரு தடவை கூடுவதற்கு இலங்கைக்கு உதவும் நாடுகள் தீர்மானித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்தன.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி பாரிஸில் நடைபெற இருப்பதும்—

அதில் கலந்து கொள்ளும் இலங்கைத் தூதுக்குழுவுக்கு நேரடியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை வகிக்க இருப்பதும் தெரிந்தவையே.

இந்தக் கூட்டத்தின் பின்னர் — இலங்கை இனப் பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வு எட்டப்பட்டால்— அதனை ஊக்குவித்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு வசதியாக — உதவும் நாடுகள் உரிய நிதி உதவிகளை வழங்கும் என்றும்—

அந்த உதவிகள் குறித்து ஆராய்வதற்காக ஏப்ரல் கூட்டத்துக்குப் பின்னர் — இவ்வாண்டில் மீண்டும் ஒரு தடவை கூடுவதற்கு உதவும் நாடுகள் தயாராக இருப்பதாகத்தெரிவிக்கப்பட்டது.

நடைபெறவிருந்த பொதுத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெறும் நோக்குடன் கடந்த மே தினத்தன்று பொதுசன உதவித் திட்டங்களை அறிவித்தமை போன்ற —கடந்த ஆட்சியாளர்களின் —முடிவுகளால் சீற்றமடைந்திருந்த உதவும் நாடுகள், கடந்த ஆண்டில் இலங்கைக்கு உதவுவது குறித்து ஆராயும் கூட்டம் எதனையும் நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கொழும்பில் இன்று மாநாடு

கொழும்பு, மார்ச். 30

வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு அபிவிருத்திக்கான நிதியை பங்கீடு செய்வது தொடர்பான கூட்டம் ஒன்று இன்று கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

வட - கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண அரசஅதிபர்கள் பங்கு பற்றுவர்.

இந்தக்கூட்டத்தில் நீதி அரசியலமைப்பு அமைச்சரும் பதில் நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மற்றும் [illegible] (ஒ-3-4)

## கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தை அம்பாறைக்கு மாற்றுவதற்கு எதிர்ப்பு

### மாணவர்கள், விரிவுரையாளர்கள் மறியல் போராட்டம்

கொழும்பு, மார்ச். 30

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தை அம்பாறைக்கு மாற்றுவதை எதிர்த்து அந்தப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக மறியல் போராட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் ஒன்று சேர்ந்து இந்தப் பேராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

தற்போது ஆரம்பத்தில் தினமும் அரை மணி நேரம் இந்த மறியல் போராட்டம் நடப்பதாகவும் —

இது பின்னர் விரிவு படுத்தப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகம் தற்போது மட்டக்களப்பு வந்தாறு மூலையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## யாழ். மாணவரின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை

### மானிய ஆணைக்குழு அதிகாரி தகவல்

கொழும்பு, மார்ச் 30

பல்கலைக்கழக அனுமதிக்காக யாழ்ப்பாண மாணவர்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்படமாட்டாது என்றும் —

அது சம்பந்தமாக அவர்கள் விடுத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் —

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிக்குப் பொறுப்பான சிரேஷ்ட உதவிச் செயலாளர் பி. அத்துலத் முதலி தெரிவித்ததாக — "சண்டே லீடர்" தகவல் வெளியிட்டுள்ளது.

வெட்டுப்புள்ளியைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இயந்திர இயக்குநர்கள் தேவை

''ஹைடில்பேர்க்'' அச்சு இயந்திரம் இயக்குவதில் தேர்ச்சியுள்ள இயக்குநர்கள் தேவை. பயிற்சிக் காலத்துக்குப் பின்னர் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. முன்னர் பணிபுரிந்த இடங்களில் பெற்ற வேலைத் திறன் சான்றிதழ்களின் பிரதிகளையும் விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பவும்.

25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: **05 — 04 — 1995**

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



## உணவு வியாபார அனுமதி (லைசென்ஸ்) - 1995

மனித போசனைக்கு ஏதேனும் உணவு வகையைத் தயாரிப்பதற்கு, காட்சிப்படுத்துவதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு, விநியோகிப்பதற்கு, பதனிடுவதற்கு, பொதியிடுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு 1995 ஆம் ஆண்டின் 01 ஆம் எண் தமிழீழ உணவுச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் (2)ஆம் உபபிரிவின்படி உரிமம் ஒன்றினை (லைசென்ஸ்) தமிழீழ உணவு முதன்மை அலுவலரிடமிருந்து (பொறுப்பாளர், தமிழீழ சுகாதார சேவைகள்) பெற்று வைத்திருந்தாலன்றி ஏதேனும் உணவுத் தொழிலை நடத்துதல் குற்றமாகும். யாழ்குடா நாட்டில் 1995 ஆம் ஆண்டிற்கான உரிமம் கோரும் விண்ணப்பப்படிவத்தை இதுவரை ஒப்படைக்காதோர் யாழ். மாநகரசபை, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகள், பிரதேச சபை உப அலுவலகங்களில் (கிராம சபைகள்) பெற்று, பூர்த்தி செய்து 10-04-1995க்கு முன்னர் தவறாது ஒப்படைத்தல் வேண்டும். இவை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஏற்புடையதாகும். மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பொறுப்பாளர்,
தமிழீழ சுகாதார சேவைகள்,
தமிழீழம்.

1995-03-29. (சி-861)



யாழ். மத்திய கல்லூரி – லியோ கழகம்

### அதிர்ஷ்டஇலாப சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு: 411 2 ஆம் பரிசு: 2121
3 ஆம் பரிசு: 940

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

331, 2494, 776, 1652, 1957
756, 278, 2123, 1293, 1160

பரிசு பொருள்களை பாடசாலை நேரத்தில் 07 – 04 – 95க்கு முன் பெற்றுக் கொள்ளலாம்.

S. சுரேஷ்
தலைவர்.

(சி/862)



நவ உதயம்
(பதிவு இல (எண் 304)
இரண்டாவது

### வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 1995-04-29 (சனிக்கிழமை) 10-00மணிக்கு நவ உதயம் அலுவலகத்தில் நடைபெறும் என அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைத்து அங்கத்தவர்களும் கூட்டத்திற்குத் தவறாது சமுகம் தரவும். கூட்டத்திற்கு வர முடியாத அங்கத்தவர்கள் எவரும் அவர்கள் பிரதிநிதியை அனுப்புவதற்கு அலுவலகத்தில் பிரதிநிதி நியமனம் செய்யும் படிவத்தைப் பெற்று நடவடிக்கை எடுக்கவும்.

பொதுச்சபையின் அங்கீகாரத்துக்கு பிரேரணைகள் எதுவும் சமர்ப்பிக்க விரும்பின் எழுத்து மூலமாக 1995 – 04 – 10 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

-பொதுச்செயலாளர்.

203, கோயில்வீதி,
நல்லூர். [35957]



தும்பளை
நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்
விசேட உற்சவங்கள்

### பற்றிய அறிவித்தல்

சந்தப் பூரண மகா அன்னதானம்
01 04 1995 சனிக்கிழமை
நிறை மணிப்பூசை
02 04 1995 ஞாயிற்றுக்கிழமை
வருடாந்த வெளிமடை
05-05 95 வெள்ளிக்கிழமை

சபா ரவீந்திரன்
தலைவர்
துப்பளை நெல்லண்டை அம்மன்
கோவில் தரும பரிபாலன சபை

(35959)


# வடக்கு - கிழக்கு ஆஸ்பத்திரிகள் கொழும்பு அரசின் கீழ் வருமா?

யாழ்ப்பாணம், மார்ச் 30

வடக்கு — கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் அரசினர் வைத்தியசாலைகள், மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருவது குறித்து அமைச்சு மட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டுவருவதாகச் சொல்லப்படுகிறது.

இம் மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி கூடுதலான சுகாதார ஊழியர்களை பதவியில் அமர்த்தி பாதிக்கப்பட்டிருக்கும் சுகாதார செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்காகவே வடக்கு — கிழக்கு ஆஸ்பத்திரிகளை கொழும்பு அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதுகுறித்துத் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக அறியப்படுகிறது. (அ-4)

## திருமலையில் மோதல் சம்பவம்;

# பொதுமக்கள் தாக்கியதில் கடற்படை சிப்பாய் காயம்

கொழும்பு, மார்ச் 30

திருகோணமலை பெரிய கடைப்பகுதியில் கடற்படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

மதுபோதையில் பெரிய கடைப்பகுதிக்கு வந்த 3 கடற்படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் உருவான பிரச்சினை மோதலாக வெடித்ததாகவும் —

பொதுமக்கள் சேர்ந்து தாக்கியதில் ஒரு கடற்படைச் சிப்பாய் காயமடைந்தார் எனவும் — தெரியவந்தது.

கடற்படையினருடன் மோதியவர்கள் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்தது. (ஒ-3)

## உள்ளூராட்சி ஒய்வூதியம் இல்லை

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி ஒய்வூதியர்களுக்கான மார்ச் மாத ஒய்வூதியம் இன்றும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்க பட்டது.

ஏனைய ஒய்வூதியர்களுக்கு இம் மாதம் 9 ஆம் திகதி ஒய்வூதியம் வழங்கப்பட்ட போதிலும், உள்ளூராட்சி ஒய்வூதியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து ஒய்வூதியர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (அ-117)

## வவுனியா பொலீஸ் சம்பளப் பிரிவில்

# 10 வருடங்களுக்கு முன்னர் நடந்த மோசடி அம்பலம்

கொழும்பு, மார்ச் 30

வவுனியா பொலீஸ் சம்பளப் பிரிவில் 10 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ள பல லட்சம் ரூபா மோசடிகள் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற இம் மோசடிகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டுவரும் கொழும்பு தேசிய புலனாய்வுப் பிரிவினர், இச்சம்பவம் தொடர்பாக சப் இன்ஸ்பெக்டர் ஒருவரையும் பொலீஸ் சார்ஜன்ட் ஒருவரையும் கான்ஸ்டபிள்கள் மூவரையும் இடைநிறுத்தி வைத்துள்ளனர். (ஒ-14)

## பொலிஸ்மா அதிபராக ராஜகுரு?

புதிய பொலிஸ்மா அதிபராக பிரதிப்பொலிஸ்மா அதிபர்களில் ஒருவரான ராஜ குரு நியமனம் பெறும் வாய்ப்பு அதிகளவில் இருப்பதாக 'ராவய' தெரிவிக்கிறது.

தற்போதைய பொலிஸ்மா அதிபர் பிராங்டி சில்வாவின் சேவைக்காலம் முடிவடைந்த பின்னர் புதிய நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

# மேலதிக ஆசிரியர் குறித்து தகவல் தராத அதிபர்கள் மீது நடவடிக்கை

## பிரதிப் பணிப்பாளர் எச்சரிக்கை

வலி — தெற்கு, மார்ச் 30

பாடசாலைகளில் மேலதிகமாகக் கடமையாற்றும் ஆசிரியர் பற்றிய தகவல்களை அறிவிக்கத் தவறும் அதிபர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை உடன் எடுக்கப்படும்.

உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு இரத்தினராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற உடுவில் கோட்ட அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றபோதிலும் சில பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் கடமையில் ஈடுபட்டிருப்பதாக தெரியவருகின்றது அவ்வாறு மேலதிகமாக ஆசிரியர்கள் கடமையில் ஈடுபட்டிருப்பின் அவர்கள் பற்றிய முழு விபரமும் தெரிவிக்கப்பட வேண்டும் — என்று அவர் அறிவுறுத்தினார்.

இலவச பாடநூல் விநியோகத்தில் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டுமெனவும் —

பாவனைக்கு ஏற்றதாக உள்ள புத்தகங்கள் மீண்டும் வழங்கப்பட்டு, போதாதிருப்பின் மட்டுமே புதிய புத்தகங்கள் வழங்க வேண்டுமெனவும் அவர் அதிபர்களிடம் வலியுறுத்திக் கூறினார். (அ-152)

## ஜி. சீ. ஈ பரீட்சை விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், மார்ச். 30

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி சீ ஈ உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக யாழ். வலயம் - 1 கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-4)

## அனுமதி பெறாமல்

# பனை மரம் தறித்தவருக்கு ரூ.10 ஆயிரம் குற்றப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச், 30

அனுமதியின்றி பனை மரங்களை தறித்தமைக்காக சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த மரக்காலை உரிமையாளர் ஒருவரிடமிருந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் 10ஆயிரம் ரூபா குற்றப்பணம் அறவிட்டனர்.

தமிழீழத்தின் இயற்கை வளமான பனை வளம்கண்டபடி அழிக்கப்படுவதை தடுக்குமுகமாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள அனுமதி முறையினை மீறி இவர் மரங்களை தறித்தமைக்காகவே இவரிடமிருந்து இக் குற்றப்பணம் அறவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

# தற்போது அழிவுகள் ஏற்பட்டாலும் அடுத்த தலைமுறை நிமிர்ந்து நிற்கும்

## ஔவையார் விழாவில் புதுவை இரத்தினதுரை

யாழ்ப்பாணம், மார்ச் 30

நாம் வாழவேண்டும், ஆளவேண்டும என்பதற்காக அல்ல. அடிமைத் தளையில் இருந்து மீளவேண்டும் என்பதற்காகவே இந்தப் போர். அழிவுகள் பல ஏற்படலாம். ஆனாலும் அந்த அழிவுகள் இன்னொரு தலைமுறைக்கான நிமிர்வுக்கு அடிகோலும் என்பதே உண்மை.

சந்தர்மடம் ஆத்திசூடி வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் நடத்திய 'தமிழ் மகள்' ஔவையார் விழாவில விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார்

பண்டிதர் இ. பொன்னம்பலம் தலைமையில் விழா நடைபெற்றது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை மேலும பேசும் போது கூறியதாவது:

அடக்கு முறையின் சின்னமாக இங்கே இருந்த தண்டவாளம் இப்போது இல்லை. தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த அந்நியரால் இடப்பட்ட இந்த [illegible] போதும் அந்த இடத்தில் இன்று விழா நடக்கிறது

அழிவுகளைக் கடந்தும் நாம ஆனந்தமாக வாழுகிறோம என்பதற்கு இந்த விழா சான்றாகிறது.

பெரிய அளவில் கம்பனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது போல் அமையாது. சிறிய அளவில் இது இடம் பெற்றாலும் ஔவையார் பற்றிய தகவல்களை நாம் தெரிந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது.

இந்தியா வெள்ளையனுடன் போராடிச் சுதந்திரம் பெற்றிருந்தால் அது இன்று மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டிருக்கும். நாம் ரத்தம் சிந்திப் பெறும் சுதந்திரமே எமது வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும்.

ஔவையார் பற்றிப் பல தரவுகள் கூறப்படுகின்றன. மு. ராஜமாணிக்கனார் தனது நூலில் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளார். எது எப்படி இருந்த போதும் அவரது கருத்துக்கள் சுதந்திரத்தை வலியுறுத்துவதாக [illegible] அவரின் பாடல்களை [illegible] சுதந்திரப் பாடல்கள் பல தந்துள்ளார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந சுப்பிரமணியன், எழுத்தாளர் திரு.க.சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோரும் பேசினர்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற மேற்படி விழாவில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், தமிழருவி திரு. த. சிவகுமார், ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு க. சிவராமலிங்கம், திரு. குணாளன் த. கனகசபை, ந. நடராசா ஆகியோரும் பேசினார்கள்.

சுழலும் சொற்போர் கவியரங்கம் உட்பட கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

ஔவையார்பாடல் மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை யாழ் மாநகர ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் வழங்கினார்கள்.

[illegible] கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (இ-111)

## இராணுவம் புதுப்புது தடைகள்!

# ஏறாவூரில் எரிபொருள் எடுத்துச் செல்ல கெடுபிடி

யாழ்ப்பாணம், மார்ச். 30

தென்தமிழீழத்தில் இராணுவத்தினர் தத்தம் பகுதிகளில் புதிது புதிதாக தமிழ் மக்கள் கொண்டு செல்லும் பொருள்கள் மீது தடைகளை விதித்து வருகின்றனர்.

ஏறாவூர் பொலீஸ் பொறுப்பதிகாரி எரிபொருள்கொண்டு செல்வது தொடர்பாக புதிய கட்டுப்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளார்.

இதன்படி ஏறாவூர் பகுதி எரிபொருள் நிலையங்களில் ஒருவருக்கு ஐந்து லீற்றர் எரிபொருளே வழங்க வேண்டும்.

என்றும் அதற்கு மேல் எரிபொருள் தேவைப்படுவோர் ஏறாவூர் பொலீஸ் நிலைய அதிகாரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

என்றும் — வாகனங்கள் வைத்திருப்போர் வாகனக் கொள்கலன்களில் மட்டுமே எரிபொருளைக் கொண்டு செல்ல முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் மட்டக்களப்பு அம்பாறை, திருகோணமலை பிரதேசங்கள் பலவற்றில் இராணுவத்தினர் தமதுவிருப்பப்படி தமிழ்மக்கள் கொண்டு செல்லும் பொருள்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்துவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4)


MANIPAY HINDU COLLEGE
MANIPAY

## NON - FORMAL EDUCATION

Applications are invited for the Following Courses.

1) English Short - hand and Typewriting.
2) Motor Rewinding.
3) Civil Draughtsmanship.
4) English Diploma

Principal

29 - 03 - 95.



## நூல் வெளியீட்டு விழா

திரு. மு. கந்தசாமி அவர்களின்
"ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முகாமைத்துவம்"

இடம்:
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம்.

காலம்:
01 04. 1995 சனிக்கிழமை காலை 9 மணி

தலைவர்:
திரு. த. குகதாசன் (அதிபர், யாழ். க. வி. நி)

நிகழ்ச்சி நிரல்

★ மங்கள விளக்கேற்றல்
★ அமைதி வணக்கம்
★ வரவேற்புரை:
செல்வன் செ. குலேந்திரநாதன்
★ தலைமையுரை:
திரு. த. குகதாசன்
★ "ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாடு - ஓர் அறிமுகம்
திரு செ. மனோகரன்
(விரிவுரையாளர், யா. க. வி. நி.)
★ வாழ்த்துரைகள்:
திரு. ராஜன் கதிர்காமர்
(தலைவர், யா.க.தொ.வி.நி. ஆளுநர் சபை)
திரு. வேதநாயகம் சில்வா
(ஓய்வுபெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர்)
திரு. க. கந்தசாமி
(கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம் II)
★ வெளியீட்டுரையும், நூல் வெளியீடும்:
திரு. த. சிவலோகநாதன்
(உதவி விவசாயப்பணிப்பாளர், யாழ். மாவட்டம்)
முதற்பிரதி பெறுபவர்:
Rtn. E சரவணபவன்
(தலைவர், யாழ். றோட்டரிக்கழகம்)
★ மதிப்பீட்டுரைகள்:
பேராசிரியர் வி. க. கணேசலிங்கம்
(தலைவர், விலங்கியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்)
பேராசிரியர் வணபிதா G F. இராசேந்திரம்
(விலங்கியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்)
திரு. S. சின்னத்துரை
(உதவி விவசாயப் பணிப்பாளர் - பயிற்சி)
★ பதிலுரை:
நூலாசிரியர்
★ நன்றியுரை:
திரு. க. ஜெயராஜா
(யா.க.வி.நி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

பிரபா பல்பொருள் வர்த்தக நிலையம்
உரும்பிராய்

தனபாலசிங்கம் வர்த்தக நிலையம்
உரும்பிராய்

(சி/863)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதி முறையில் மாற்றங்கள் கொண்டுவரத் திட்டம்

## அமைச்சர் பத்திரன தகவல்

கொழும்பு, மார்ச் 30

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நடைமுறைகளில் மாற்றங்களைக் கொண்டுவர கல்வி உயர்கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரன இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு பிரவேசப் பரீட்சை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது.

பெற்றோரும் மாணவர்களும் செய்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து பல்கலைக்கழக அனுமதிக்கான நடைமுறையில் மாற்றங்கள் கொண்டுவரத்திட்டமிடப்பட்டுள்ளது.

மிகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள நிலையிலும் பல்கலைக்கழக அனுமதி தமக்கு கிடைக்கவில்லை என்பதே மாணவர்களின் பிரதான குற்றச்சாட்டாகும்.

இதனை நிவர்த்தி செய்ய திறமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பான தற்போதைய நடைமுறைகள் பற்றி பேராசிரியர் கே. எம். டி. சில்வா விரிவான ஆய்வு அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளார்.

அந்த அறிக்கையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தற்போது ஆய்வு செய்து வருகிறது.

இவ்வாறு கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரன மேலும் தெரிவித்தார். (ஐ-5)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். மாவட்டத்தின் அத்தியாவசிய சேவைகள்தொடர்பாக நாளை வெள்ளிக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் ஏப்ரல் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமைமாலை 3 - 30 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணி விநியோகம் அடுத்த வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச். 30

இவ்வருடத்திற்கான பாடசாலை மாணவர்களின் இலவசச் சீருடை விநியோகம் யாழ். மாவட்டத்தில் அடுத்த வாரம் மேற்கொள்ளப்படுமென கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

5 ஆயிரத்து 960 பெட்டிகளில் 9 வகையில் எடுத்து வரப்பட்ட இச் சீருடைத் துணிகள் யாவும் கடந்த திங்களன்று கப்பலில் இருந்து முழுமையாக இறக்கி முடிக்கப்பட்டுள்ளன.

முதலாம் தவணை விடுமுறைக்கு முன்னதாக இச் சீருடைத் துணிகளை விநியோகித்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை தற்போது கல்வித்திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

## புதுடில்லி நிகழ்ச்சிக்கும் சந்திரிகா தாமதம்!

புதுடில்லி, மார்ச் 30

வெளிநாட்டுத் தலைவர்கள் ஒரு நாட்டுக்குச் செல்லும்போது — இறுதியாக அந்நாட்டை விட்டு வெளியேறும் சமயம் பத்திரிகையாளர்களைச் சந்திப்பது ராஜீக மரபு.

அதன்படி -இந்தியாவில் இருந்து பங்களாதேஷுக்குப் புறப்படும் முன் ஜனாதிபதி சந்திரிகா புதுடில்லியில் பத்திரிகையாளர்களைச் சந்திக்க ஏற்பாடாகி இருந்தது.

அந்த பத்திரிகையாளர் மாநாட்டுக்கும் சந்திரிகா வழமைபோல ஒரு மணித்தியாலம் காலதாமதமாகவே சென்றிருந்தார்.

நாட்டைவிட்டுப் புறப்படும் ஏற்பாடுகளில் சந்திரிகா ஈடுபட்டிருந்ததால் தாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## பௌத்த பீடாதிபதிகளுக்கு அரசமைப்பு பற்றி விளக்கம்

கொழும்பு, மார்ச் 30

அரசமைப்பில்மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்துபௌத்தபீடாதிபதிக்கு நேற்று விளக்கமளிக்கப்பட விருந்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்றுசெய்திவெளியிட்டுள்ளது.

அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகளுக்கே இந்த விளக்கம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இது தொடர்பாக விளக்கம் அளிக்க பௌத்த பீடாதிபதிகளை நேற்று சந்திக்கவிருந்தார்.

அரசமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான நகல் சட்டபடம் எதிர்வரும் ஜூலையில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட விருக்கிறது. (இ-3)

## புதிய அதிபர் சேவையை ஏற்படுத்த நடவடிக்கை

ஆசிரியர் சேவைக்கு சமாந்தரமாக அதிபர் சேவை ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை ஆசிரியர் சேவையை தாபித்தல் ஆசிரியர்களை உள்ளெடுத்தல் ஆசிரிய சேவைப் பிரமாணத்தின்படி புதிய சம்பளங்களை வழங்குதல் போன்றன தொடர்பாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் எம். பி.டீ பீரிஸ் இனால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணக் கல்விச்செயலாளர்களுடாக சகல மாகாணக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

★ 06- 10- 1994ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் நிறுவப்பட்டுள்ள ஆசிரிய சேவையில் முன்மொழியப்பட்ட சம்பளங்கள் 1-1-1995 முதல் அமுலுக்கு வரும்.

★ மேற்படி ஆசிரிய சேவை அமுலுக்கு வந்ததிகதியில் சேவையிலிருந்த அனைத்து ஆசிரியர்களும் ஆசிரிய சேவையில் உள்ளெடுக்கப்படுவார்கள்.

★ பயிலுநர் ஆசிரியர்களுடைய பயிற்சிக்காலம் பூர்த்தியடைந்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை அவர்கள் ஆசிரிய சேவையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். (இ-14)

## பத்திரிகையாளர்களுக்கு இலவச பஸ் பயணம்!

கொழும்பு, மார்ச். 30

தென்மாகாணத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் போக்குவரத்துச்சபை பஸ்களில் இலவச பிரயாணம் மேற்கொள்வதற்கான ஆணைப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தென்மாகாண தகவல்துறை அமைச்சர் திரு. டெனி ஹித்தடிய மேற்கொண்டுள்ளார்.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 150 பத்திரிகையாளர்களுக்கு இந்த இலவச போக்குவரத்து ஆணைப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. தென் மாகாண பத்திரிகையாளர் சங்கம் இது குறித்து நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்தது. [ஒ-14]

## கண்டி குண்டு வெடிப்புச் சம்பவம்
## பொலிஸ் இன்ஸ்பெக்டரை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, மார்ச் 30

கண்டிஅருப்பொலவில் கடந்த திங்களன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில்— கைதுண்டிக்கப்பட்ட நிலையில் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சப்இன்ஸ்பெக்டரை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது பெண் ஒருவர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

கொல்லப்பட்ட பெண் கண்டி அடிப்படைக் கற்கை நிலையத்தில் பணிபுரிபவர் என்றும்—

கைதுண்டிக்கப்பட்ட பொலீஸ் அதிகாரிமுன்பு கண்டியில் கடமையாற்றி பின்னர் பொலனறுவைக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர் என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவருக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்து வந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

இறந்த பெண் திருமதி. சரோஜினிஹேரத் என தற்போதுஅடையாளம் காணப்பட்டுள்ளார். (ஐ-5)

## அன்னை பூபதி நினைவாக சிரமதானம்

சாவகச்சேரி மார்ச். 30

தியாக தீபம் அன்னைபூபதி நினைவாக மட்டுவில் கிழக்கு ஞானதீபம் சனசமூகப் பிரிவில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

ஞானதீபம் சனசமூக நிலையத்தால் நடத்தப்படும். அனீபா பாலர் பாடசாலை சிறுவர்களின் பெற்றோரும், நிர்வாக சபை உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர். (ஐ-5)

## புலிகளின் குரல் வானொலியில்

30 — 03 — 1995

வியாழன் இரவு

- ★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்பேசம் உயர்வோம் — நிகழ்ச்சியில் "நல்ல தண்ணீரை பாதுகாக்க வேண்டும்" குறுநாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40—மொழியும் வாழ்வும்
- ★ 8-50—எங்களின் தேசம்

31 — 03 — 1995

வெள்ளி காலை

- ★ 7-02 —மாவீரவணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

வியாழன் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — பொன்விளையும் பூமி
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — கேள்வி பதில்— விளையாட்டுத் தொடர்பானவை
- ★ 6-25 — என் தெரிவு

## ஆபிரிக்க இளைஞருக்கு இதயம் வெளிப்புறத்தில்!
### கவசம் அணிந்து வாழ்கிறார்!!

கேப்டவுன், மார்ச் 30

தென் ஆபிரிக்காவில் வாழ்ந்துவரும் இளைஞர் ஒருவரின் இதயம் பிறவியிலேயே உடலுக்கு வெளியில் அமைந்துள்ளது.

அந்தோனி பென்னிஜியர் என்னும் 19 வயதான இந்த இளைஞன் வைத்தியர்களின் ஆலோசனைப்படி வெளியே தெரியும் அவரது இதயத்துக்கு கவசம் அணிந்துள்ளார். இவர் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றார்.

கல்லூரி மாணவரான இவரின் இதயம் வெளியில் தெரிவதால் தாக்குதலுக்கு உள்ளாகும் ஆபத்து அதிகமாக உள்ளது.

இதனால் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இவர் இழந்துள்ளார்.

ஆபிரிக்காவின், யோகன்ஸ் பேர்க் நகரில் மிகவும் பின்தங்கிய கிராமத்தில் பிறந்த இம்மாணவன், சிசுவாக இருக்கும்போது இறந்து விடுவான் என்றே பலரும் எதிர்பார்த்தனர்.

சத்திர சிகிச்சை மூலம் இதயத்தை உள்ளுறுப்புகளுடன் தொடர்புபடுத்த எடுத்த முயற்சிகள் வெற்றிதரவில்லை. எனினும் நுரையீரல் எல்லாமே எவ்வித இடையூறும் இன்றி இப்போது இயங்கி வருகின்றன.

எனினும் இதயத்தில் நுண் கிருமிகள் தொற்றாதவாறு இவர் நோய்த்தடுப்பு மாத்திரைகளை அடிக்கடி உட்கொண்டு வருகின்றார்.

கோடியில் ஒருவருக்கே இந்த நிலை ஏற்படும் என்று வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-14)

## படையினரைத் தாக்கிய ஓட்டோ சாரதி
### புத்தளம் நகரில் கைகலப்பு

கொழும்பு, மார்ச் 30

புத்தளம் நகரில் கடந்த ஞாயிறன்று இராணுவத்தினரும், ஓட்டோ சாரதி ஒருவரும் மோதிக்கொண்டதை அடுத்து, நகரில் பதற்ற நிலை தோன்றியது.

இக் கைகலப்பின் போது இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

இவர் பின்னர் புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து சிலாபம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இராணுவத்தினரைத் தாக்கிய ஓட்டோ சாரதி புத்தளம் பொலீஸில் சரணடைந்துள்ளார்.

இதனை அடுத்து புத்தளம் நகரில் அனைத்து ஓட்டோ சாரதிகளும் தமது சேவையை இடைநிறுத்தியுள்ளனர்.

தற்போது சமரச முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## தொழிலாளர் சங்கம் தெரிவுக் குழுவுக்கு மகஜர்

"இலங்கை பிரஜா உரிமைச் சட்டத்தில் காணப்படும் வம்சாவழிப் பிரஜை, பதிவுப் பிரஜை போன்ற பதங்கள் அதிலிருந்து நீக்கப்பட வேண்டும்."

—இவ்வாறு தொழிலாளர் தேசியசங்கம், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக தொழிலாளர் தேசியசங்கம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு மகஜர் அனுப்பியுள்ளது. அத்துடன் இம்மாதம் 2ஆம் திகதி நேரடியாகவும் சாட்சியமளித்தது.

அந்தமகஜரில் அடிப்படை மனித உரிமை, மொழி, பிரஜாஉரிமை, ஜனாதிபதி முறை, விகிதாசார தேர்தல் முறை ஆகியவற்றுடன் தற்போது நடைமுறையில் இருக்கும் அரசமைப்பில் இந்திய வம்சாவழி மக்களுக்குப்பாதகமாக உள்ள 13[7], 14[2] சரத்துக்களை நீக்கவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது. [ஐ-5]

# அம்பாறையில் முஸ்லிம்களுக்கு சுதந்திரமான அதிகார அலகு

### முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் பிரேரணை

அம்பாறை மாவட்ட முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்ட, சுதந்திரமான முஸ்லிம்அதிகார அலகொன்று அமைக்கப்படவேண்டும்.

இத்தகைய பிரேரணை, முஸ்லிம் காங்கிரஸின் தேசிய மகாநாட்டின்போது அக்கட்சியால் முன்வைக்கப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளமேற்படி கட்சியின் 13ஆவது தேசிய மாநாட்டில், இனப்பிரச்சினை தீர்வுக்கான அக்கட்சியின் யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளன.

அதன் போதே மேற்படி பிரேரணையும் முன்வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-14)

# மோட்டார் சைக்கிள் எடுத்துவர ஆசிரியருக்கு சிபார்சு கடிதம் வழங்குக

### ஆசிரிய சங்கம் கல்விப்பணிப்பாளர்களுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் பாவனைக்கென கொழும்பில் இருந்து மோட்டார் சைக்கிள், ஓட்டோ போன்ற வாகனங்களை எடுத்து வருவதற்கு சிபார்சுக் கடிதம் வழங்குவது தொடர்பாக யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

கொழும்பில் இருந்து மேற்படி வாகனங்களை எடுத்து வருவதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் சிபார்சுக் கடிதங்களைக் கோரிய போது அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும் —

அதனை தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பிக்கும், கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமிக்கும் இக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

பின்வரும் காரணங்களுக்காகத் தங்கள் முடிவை மறுபரிசீலனை செய்து வாகனங்களை எடுத்து வர அனுமதி கோரும் அதிபர்கள், ஆசிரியர்களது விண்ணப்பங்களை சிபார்சு செய்யுமாறு தங்களைக் கோருகிறோம்.

★ அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கு அரசின் பஸ் சேவையோ புகையிரத சேவையோ யாழ். மாவட்டத்தில் இல்லை.

★ போக்குவரத்து கட்டணங்கள் மிக அதிகமாக உள்ளன.

★ வாகனங்களை வாங்கவோ அல்லது எடுத்து வரவோ திணைக்களத்தினதோ அல்லது திணைக்களத்தில் உள்ள எந்த அதிகாரியின் நிதியோ உபயோகிக்கப்படவில்லை. அதிபர்கள், ஆசிரியர்கள் தமது சொந்தப் பணத்திலேயே வாங்குவதற்கு சிபார்சு கோருகிறார்கள்.

★ ஏனைய திணைக்களங்களின் ஊழியர்களுக்கும், சிற்றூழியர்களுக்கும் வாகனம் பெறுவதற்கு அத் திணைக்களத் தலைவர்கள் சிபார்சுக் கடிதம் வழங்கியுள்ளார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

★ இந் நிலையில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வாகனம் எடுத்து வர அனுமதி கோரும் விண்ணப்பத்தை தாங்கள் சிபார்சு செய்ய மறுப்பது மிகவும் வேதனையாக உள்ளது. அத்துடன் அவர்கள் தமது சேவைக்கு உரிய நேரத்தில் வசதியாக பயணம் செய்யும் உரிமையை மறுப்பதாகவும் இச் செயல் அமைந்துள்ளது.

★ எனவே தயவு செய்து தங்களது முடிவை மறுபரிசீலனை செய்து அதிபர்கள், ஆசிரியர்கள் வாகனங்கள் வாங்குவதற்கு கோரும் விண்ணப்பத்தை சிபார்சு செய்து அனுப்புமாறு தங்களைச் சங்கம் கோருகின்றது.

# தாயகம் திரும்புவதற்கு விரும்பிய 32 ஈழத்தமிழ் போராளிகள்

### கடைசி நேரத்தில் மனம் மாறினர்

சென்னை, மார்ச் 30

வேலூர் திப்பு மஹால் கோட்டைக்குள் பொலீஸ் பயிற்சிப் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்த ஈழத் தமிழ் போராளிகள் 32 பேர் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்ததை அடுத்து சென்னைக்கு கூட்டி வரப்பட்டதாகவும்—

ஆனால் இறுதி நேரத்தில் மனம்மாறி தா[illegible] அவர்கள் மறுத்து விட்டதால் குடியாத்தத்தில் திறந்த அகதி முகாமில் தங்குவதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டதாகவும் சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

தமது விருப்பத்துக்கு மாறாக தங்களைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சென்[illegible] அகதிகளுக்கான ஐ. நா. தூத[illegible]கள் முறையிட்டதை அடுத்தே —

பொலீஸ் பாதுகாவலுடன் அவர்கள் அழைத்து வரப்பட்டு குடியாத்தத்தில் உள்ள திருமகள் மில்ஸ் கலைக் கல்லூரி விடுதி முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு இடமளிப்பதற்காக அந்த விடுதியில் தங்கியிருந்த 57 ஈழ அகதிக் குடும்பங்களைச் சேர்ந்த 219 பேர் குடியாத்தத்தில் வேறு ஒரு முகாமுக்கு மாற்றப்பட்டனர். [உ]

# கோட்ட ரீதியாக ஆசிரிய மடுவங்கள்

### விரைவில் அமைக்கப்படும்

கொழும்பு, மார்ச் 30

புதிய ஆசிரிய சேவைத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் உள்ள கோட்ட கல்விப் பிரிவு ரீதியாக "ஆசிரிய மடுவங்கள்" அமைக்கப்படவுள்ளன.

சேவையில் உள்ள ஆசிரியர்களும், இளைப்பாறிய ஆசிரியர்களும் அந்த ஆசிரிய மடுவங்களில் அங்கம் வகிப்பர்.

ஆசிரியர் ஒருவர் லீவு பெறும் போது அவருக்குப் பதிலாக இந்த மடுவத்தில் இருந்து ஓர் ஆசிரியரை கடமையாற்ற அழைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

## இலங்கை நிர்வாக சேவையில் 107 பயிலுநர்களுக்கு நியமனக் கடிதங்கள்

கொழும்பு மார்ச் 30

இலங்கை நிர்வாகசேவைக்கு புதிதாக சேர்க்கப்பட்ட 107 பயிலுநர் உத்தியோகத்தர்களுக்கும் நியமனக் கடிதங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வழங்கப்படவுள்ளன.

அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு. ரட்ணசிறி விக்கிரமநாயக்கநியமனக் கடிதங்களை உரியவர்களுக்கு நேரடியாக வழங்குவார்.

தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்கள் அனைவரையும், ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு அரச நிர்வாக அமைச்சுடன் இணைந்த இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு சமுகம் தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

1993 இல் நடத்தப்பட்ட போட்டி பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட இந்தப் பயிலுநர் உத்தியோகத்தர்களுக்கு, அரச நிர்வாக அமைச்சின் மூலம் முறைசார் பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது. (ஐ-5)

## புதுக்குடியிருப்பில் பலிக்களம் நாடகம்

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலை மைதானத்தில் நாளை வெள்ளி இரவு 7மணிக்கு யாழ். திருமறைக் கலா மன்றத்தின் "பலிக்களம்" (திருப்பாடுகளின் காட்சிகள்) நாடகம் நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு பங்கைச் சேர்ந்த 150 கலைஞர்கள் பங்குபற்றவுள்ள அந்த நாடகம் 150 அடி அகலமான மேடையில் இடம் பெறும். [ஜ-51]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லஇன நீண்டசெவி உள்ள வளர்ப்பதற்கும், இறைச்சிக்கும் உகந்த ஆட்டுக்கடா உடன் விற்பனைக்கு உண்டு. அத்துடன் ஓர் பழைய லுமாலா லேடிஸ் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. தியாகராசா, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். [8459]

M - 1000 - EN National, M - 9000 - EN Panasonic வீடியோ கமரா, National - 7,500 வீடியோ டெக் தொடர்பு: 12A, கந்த புராண வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (35943)

பூச்சி நீக்கப்பட்ட இரண்டு மாத பிறவுண் சாம்பல் நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: றோசாத் தோட்டம். தலங்காவல் பிள்ளையார் கோயில் அருகில், திருநெல்வேலி கிழக்கு. (35950)

## வகுப்புகள்

கேக் ஐசிங், மார்ச்சினி அலங்காரம், Fondant Icing, ஒப்பனைக்கலையும், தலையலங்காரம், பூ அலங்காரங்கள், மலர்ச்செண்டுகள் தயாரித்தல் [Silk Ribbon, Stocking Net, Bouquets] புதிய வகுப்புக்கள் 16-4-95 முதல் ஆரம்பமாகிறது. தொடர்பு: Yogi Home Science Academy நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் (முத்திரைச் சந்தையடி), நல்லூர். (சி-634)

## இலகு திருமண சேவை

36 வயது, Non R.C. பத்து வருடங்கள் ஜேர்மனியில் தொழில்புரிபவருக்கு ஏற்ற மணப்பெண் அங்கு அல்லது வெளிநாடுகளில் இருந்து தேவை. R C.யும் விரும்பத்தக்கது. விமலா, நாச்சிமார் கோயிலடி. [35915]

## வீனஸ் அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு T.V. அன்ரனா பொருத்துதல், பழுது பார்த்தல், T.V. டெக், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்வதற்கு வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-649]

## மனித உயிரியல்

மனித உயிரியல் I கே. டி. அருட்பிரகாசம், வை என். ஏ. ஐயதுங்க விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-640]

உ
சிவமயம்

கிளிநொச்சி – குஞ்சுப்பரந்தன்
அருள்மிகு
பொறிக்கடவை அம்பாள் ஆலய
பங்குனித் திங்கள்
வேள்வி விழா

அடியார்களே!

கரைச்சிப் பகுதியின் மிகப் பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க குஞ்சுப் பரந்தன் பொறிக்கடவை அம்பாள் ஆலயப் பங்குனித் திங்கள் வேள்வி விழா நிகழும் பவ வருடம் 20ஆம் நாள் [03 – 04 – 95) 3ஆம் திங்கட்கிழமை பகல், இரவு, மறுநாள் அதிகாலை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

**அடியார்களின் கவனத்திற்கு!**

ஆலயத் திருப்பணி நிதி கொடுப்பவர்கள் பரிபாலன சபையாரிடம் கொடுத்துச் சபையாரின் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

★ அடியார்கள் வேள்வித் தினத்தன்று ஆலய தரிசனம் செய்து அம்பாள் அருள் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
— ஆலய பரிபாலன சபையினர்

பொறிக்கடவை,
குஞ்சுப்பரந்தன். [35936]

# தந்தை செல்வா நினைவு ஆராதனை

வட்டுக்கோட்டை, மார்ச் 30

தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 97ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சுண்டிக்குளி பரியோவான் தேவாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4–30 மணிக்கு நினைவு ஆராதனை நடைபெறும்.

தென்னிந்திய திருச்சபை முன்னாள் ஆயர் அதிவண டீ. ஜே. அம்பலவாணர் அருளுரை வழங்குவார்.

கிறிஸ்தவ, இஸ்லாம் நாகரிகத் துறைத் தலைவர் வணபிதா கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் தந்தை செல்வாவின் வாழ்வுக்கு சாட்சி பகருவார்.

மாலையில் செல்வா நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். [இ–14–161]

# புத்தர் சிலை உடைத்து தங்கம் திருட்டு

கொழும்பு, மார்ச். 30

அம்பன்பொல — எல்கிரி புத்த விகாரையிலுள்ள புத்தர் சிலை உடைக்கப்பட்டு அதனுள் இருந்த சுமார் 1லட்சத்து 14ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கம் களவாடப்பட்டுள்ளது.

விகாரையிலிருந்த 17வெண்கலச் சிலைகளையும் அவர்கள் திருடிச்சென்றுள்ளனர்.

இவ்விகாரை பாடசாலை சிறுவர்களின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டிருந்தது.

வெளிவந்துவிட்டது!

அஷ்டலக்ஷ்மியின்
அற்புத வெளியீடுகள்

ஆண்டு 5 தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பயன்படக் கூடிய

**பொது**
**அறிவுக் களஞ்சியம்**

4,000 வினா-விடைகள் 180 பக்கங்கள்
ரூபா **90**

நினைத்த காரியம் கைகூட, நோய்கள் அகல, வழக்குகளில் வெற்றிபெற, கண்ணொளிபெற மற்றும் பல சித்திகள் கைகூட சமய குரவர் அருளிய 34 பதிகங்கள் அடங்கிய

120 பக்கங்கள்

**( தமிழ் வேதத் திரட்டு )**

ரூபா **50/-** சிறப்பு பிரதி ரூபா **75/-**

கிடைக்குமிடங்கள்
ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்,
சிவா அச்சகம்
கைதடி. (சி/650]

**G.A.Q (பேராதனை) -96**

பதிவுகளை மேற்கொள்வதற்குரிய விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
எமது நிறுவனத்தில் பதிவை மேற்கொள்வதற்கான இறுதித் திகதி: **02 — 04 — 1995**
இதற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன
விவரங்களுக்கு
**S** அருள்நங்கை
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். [சி-859]

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE**
**4 MONTHS**
திங்கள், புதன் வகுப்புக்கள்
**ஆரம்பம்: 03 - 04 - 1995**
8-30 மணி

Lectures by:
S. P. Sivapathasundaram
M. I. D. P. M [Lond.]

★ கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா 400/- மட்டுமே.
★ அச்சடித்த பாடக்குறிப்புகள் இலவசம்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ Short - Hand & Typing. புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
★ Lotus 1 - 2 - 3

**ஆரம்பம்: 05 - 04 - 1995**

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.
(C-858)

**31-ம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம்: 14 – 05 – 1953
மறைவு: 01 – 03 – 1995

**அமரர் செ. அம்பிகைபாலன்**
(தொழில் நுட்ப உத்தியோகத்தர் – குடிசார் எந்திரவியல் இறுதியாண்டு மாணவன்)

''ஒருநாளும் கலங்காது எமைக்காத்த ஐயா!
ஒருபோதும் எமைப்பிரிந் தறியாத் தெய்வமே,
ஒருகணமும் உமைமறந்து வாழ்வோமோ அப்பா
ஒரு மாதம் ஓடியதோ எமைக்காண வாராயோ''

பிரிவால் கலங்கும்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். [8396]

உ
குகமயம்
தொண்டமனாறு
ஸ்ரீ செல்வச் சந்நிதிப் பெருமானின் வருடாந்த
**கும்பாபிஷேகத்தினம்**

**வேலவன் அடியார்களே!**

நிகழும் பவ வருடம் பங்குனி 18 ஆம் நாள் சனிக்கிழமை **(01 - 04 - 1995)** காலை 7 மணிக்கு 1008 சங்குப்பூசை ஆரம்பிக்கப்பட்டு, 10–30 மணிக்கு சங்காபிஷேகமும், 11–30 மணிக்கு சண்முக அர்ச்சனையும், 12–30 மணிக்கு பெருமான் திரு உலா விஷேட மேளவாத்தியங்களுடன் நடைபெறவிருப்பதினால் அடியார்களும் இதில் கலந்து கொண்டு எம்பெருமானின் அருள்பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

அன்றைய தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் அன்னதானத்திலும் பங்குகொள்ளுமாறு அடியார்களை வேண்டுகின்றோம்.

உபயம்:
ம. கந்தையா ஆசிரியர் (இளைப்பாறிய)
மனைவி, மக்கள், மருமக்கள்.
(அவர்கள் சார்பாக வே. முருகேசு சுவாமிகள்)

சிறுப்பிட்டி,
நீர்வேலி. [35934]

1971ஆம் ஆண்டு யாழ். கோட்டை வெளியில்
300 அடி மேடையில் 300க்கும் அதிகமான
கலைஞர்களைக் கொண்டு மேடையேறிய பிரமாண்டமான
தயாரிப்பு மீண்டும் மேடையேறுகிறது

**திருமறைக் கலாமன்றம்**
வழங்கும்

**அன்பில் மலர்ந்த**
**அமர காவியம்**
(இறைமகன் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி)

மன்ற அரங்கில்:
1995 ஏப்ரல் 6, 7, 8, 9ஆம் திகதிகளில் (நான்கு தினங்கள்) தினமும் மாலை 7–15 மணிக்கு.

முக்கிய குறிப்பு:
மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்களே உண்டு. தயவு செய்து முன்னதாகவே உங்கள் ஆசனங்களை அலுவலகத்தில் பதிந்து கொள்ளுங்கள்.

— திருமறைக்கலாமன்றம்.

238, பிரதான வீதி, யாழ். (சி-583)

# சிறுவர்களைப் பாதிக்கும் புதிய வகை நோய்

## தெற்கில் வேகமாப் பரவுகிறது

கொழும்பு, மார்ச் 30

இரத்தத்துடன் தொடர்புடைய ''தலசிமி'' (Thalassemic) என குறிப்பிடப்படும் புதியவகை நோய் ஒன்று இலங்கையில் சிறுவர்களிடையே பரவலாக காணப்படுவது தெரியவந்துள்ளது.

ஏற்கனவே நாடுமுழுவதிலும் 600பேர் வரையில் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் மரணமடைந்துள்ளபோதிலும் அவ் எண்ணிக்கை சரியாக தெரியவரவில்லை என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடமேல், வடமத்திய, மத்திய, ஊவா மாகாணங்களைச் சேர்ந்த சிறுவர்களே பெருமளவில் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வளர்ச்சியில் மந்த நிலையும், அருவருப்பான தோற்றமும், இந்நோயின் ஆரம்ப அறிகுறிகள் ஆகும்.

இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் இறுதியில் மரணத்தை தழுவுகின்றனர்.

இந்நோயின் காரணிகள் பரம்பரை அலகுடன் காணப்பட்டு, பெற்றோர்களிடம் இருந்தும் சிறுவர்களுக்கு கடத்தப்படுவதாக சுகாதார அமைச்சர் ஏ. எச். எம் பௌசி தெரிவித்துள்ளார்.

இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களின் சிவப்பு இரத்த அணுக்கள்—செங்குருதி சிறு துணிக்கைகள்—சரியான முறையில் செயற்பட முடியாமலும், போதுமான அளவு ஒட்சிசனை கொண்டு செல்ல முடியாமலும் போகின்றது.

இதுவே பாதிக்கப்பட்டவர்களை நோயாளிகள் ஆக்குகின்றது.

இந்நோய் இதுவரையில் இலங்கையில் அறியப்பட்டிருக்கவில்லை. (இ–14]

# பேச்சுகள் தோற்றால் மரணங்களே மிஞ்சும்

## பிரதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச். 30

''தற்சமயம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் அநியாய மரணங்களே மிஞ்சும்''

தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த தற்போது நடைபெற்று வரும் பேச்சுக்கள் நிச்சயம் வெற்றி பெற வேண்டும். பேச்சுக்கள் தோல்வி கண்டால் அநியாய மரணங்களும், உடமைகள் சேதமும் தான் ஏற்படும். அதற்கு எவரும் இடம் அளிக்கக்கூடாது.

பேச்சு தொடர சகல தரப்பும் தங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்—என்றார்.

## 5 ஆம் ஆண்டு மாணவருக்கு

# அடுத்த தவணை தொடக்கம் புதிய பாடத்திட்டம் அமுல்

கொழும்பு, மார்ச். 30

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வகுப்பு மாணவர்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டம் அடுத்த தவணை தொடக்கம் அமுலுக்கு வரவுள்ளது.

இந்த வருடத்திற்கான புலமைப் பரிசில் பரீட்சை டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் நடைபெற உள்ளது.

புதிய பாடத்திட்டம் பற்றி ஏற்கெனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார். [இ–5]

# மகாபொல புலமைப் பரிசில் பல்கலைக்கழக மட்டத்தில்

## மே மாதம் வழங்கப்படும்

கொழும்பு, மார்ச்30

மகாபொல புலமைப்பரிசில் வைபவங்கள் இம்முறை பல்கலைக்கழக மட்டத்திலேயே நடத்தப்படவுள்ளன.

தேசியரீதியாக, மகாபொல புலமைப்பரிசில் வைபவங்கள் நடத்தப்படும்போது மாணவர்களுக்கு ஏற்படுகின்ற வீணான சிரமங்களையும், செலவினங்களையும் குறைக்கும் வகையில், பல்கலைக்கழகங்களில் வைத்தே சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு இதற்கான காசோலைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் மே மாத காலப்பகுதியில் சகல பல்கலைக்கழகங்களிலும் இது தொடர்பான வைபவங்கள் நடைபெறவுள்ளன.

93/94ஆம் கல்வியாண்டில் 4ஆயிரத்து 600 மாணவர்கள் இப்புலமைப்பரிசில்களை பெறவுள்ளனர்.

இலங்கை முழுவதிலுமிருந்து பல்கலைக்கழகங்களுக்குதெரிவாகியுள்ள மாணவர்களில், அவர்கள் பெற்றபுள்ளிகள் அடிப்படையில், 3ஆயிரத்து 800 பேரும்— ஏனைய உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 800 பேரும்— இம்முறை புலமைப் பரிசில் பெறவுள்ளனர். [இ–14]

# இந்தியாவில் பிறந்த 200 பேர்

கொழும்பு, மார்ச் 30

வடபகுதியிலிருந்து தமிழகம் சென்று அகதிமுகாம்களில் வாழ்வோர், அங்கு திருமணம் செய்துகொள்வதால்இலங்கை திரும்பும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விவாகம் செய்தோர் தனியான குடும்பமாக பதிவு செய்து கொள்வதால், அவர்களுக்கு தமிழகத்தில் தனியாக உலர் உணவும் வழங்கப்பட்டது.

குல பேதங்களையோ, சீதனக் கொடுக்கல் வாங்கல்களையோ கவனத்தில் கொள்ளாது— இவ்வாறு திருமணம் செய்து கொண்டோர் எழுபது சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளனர்.

மார்ச் 8 ஆம் திகதிக்கும் 17 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நாட்களில் திருகோணமலைக்கு வந்த அகதிகளில் இந்தியாவிலேயே பிறந்த சுமார் 200 குழந்தைகளும் அடங்குகின்றன. [இ–14]

# நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 30

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு கம்பன் கழக அங்கத்தவர் திரு. ஆறு திருமுருகனின் பெரியபுராணத் தொடர் நிகழ்வு சொற்பொழிவு இடம்பெறும். அறிமுகவுரையை திரு. க. புலேந்திரன் வழங்குவார். [இ–14]

# இலவச மூக்கு கண்ணாடி

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 55பேருக்கு இலவச மூக்குக்கண்ணாடிகளை வழங்கினர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் த. நவரத்தினராசா தலைமையில் சாவகச்சேரி சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் யாழ். இந்து சமயப் பேரவைத்தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். [இ–117]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## காலக்கெடு: இரண்டு

எரிபொருள் தடையை நீக்குவதற்கும், மீன் பிடித் தடையை நீக்குவதற்கும் இணக்கம் தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா, தலைவர் பிரபாகரனுக்குக் கடிதம் எழுதிய விவரம் இப்போது தெரியவந்துள்ளது. இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர், ஜனாதிபதி இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார்.

அரசு- விடுதலைப் புலிகள் பேச்சின்போது, புலிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட நான்கு கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, தலைவர் பிரபாகரன் காலக்கெடு விதித்து எழுதிய கடிதத்தைத் தொடர்ந்தே அவற்றில் இரண்டை வழங்குவதற்கு சந்திரிகா இணக்கம் தெரிவித்துள்ளார்; வாக்குறுதி அளித்துள்ளார்.

இந்த வாக்குறுதிகளையும், ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்காக அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை மீண்டும் அரசுக்கு கால அவகாசம் கொடுத்திருக்கிறார் தலைவர் பிரபாகரன்.

அதாவது தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்ப்பது சம்பந்தமாக சந்திரிகாவும் அவரது அரசாங்கத்தினரும் வாயால் சொன்னவற்றை, எழுத்தில் வடித்தவற்றை, செயலில் காட்டுவதற்கு, நடைமுறைப்படுத்துவதற்கு, காலக்கெடு வழங்கப்பட்டிருக்கிறது.

ஒப்புக் கொண்டதைச் செயற்படுத்துவதில் அரச தரப்பில் காணப்படும் தயக்கமும், தடங்கல்களும், தாமதங்களும் தந்த அனுபவத்தின் அடிப்படையிலான காலக்கெடு இது.

அரசாங்கம் வெறுமனே வாக்குறுதிகளையும், இணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு செயலளவில் அசையாது இருப்பதால் தமிழர்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. வீணாகக் காலம் கடந்து செல்லுமே அன்றி, தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலை தானும் முன்னேறாது.

ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தளவில், வெறும் வாக்குறுதிகளைக் கொடுத்து. சமாதானத்துக்கான சாதகமான சூழ்நிலை தோன்றி விட்டதாக வெளியிலே காட்டிக் கொண்டால், வெளி உலகத்தை நம்ப வைத்தால், சர்வதேச நாடுகளில் இருந்து பெரும் நிதி உதவியைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புண்டு.

அதனாலேயே வாக்குறுதிகளோடும் இணக்கம் தெரிவிப்பதோடும் அரசு நின்று விடப் பார்க்கிறது. ஆனால் தமிழ் மக்கள் வெறும் வாய்ச் சொல்லைக் கேட்டு ஏமாந்து கொண்டிருக்க முடியுமா?

ஏப்ரல் மாதம் 27, 28, ஆம் திகதிகளில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் பாரிஸில் நடைபெற உள்ளது. சமாதானத்துக்குச் சாதகமான நிலை உருவாகி விட்டது என்று சம்பந்தப்பட்ட நாடுகள் நம்பினால், ஸ்ரீலங்கா அரசுக்குக் கிடைக்க இருக்கும் நிதி உதவி மிக அதிகமாக இருக்கும்!

சமாதானத்துக்குச் சாதக நிலை, என்ற தோற்றம் திருப்திகரமானதாக இருந்தால் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்று சர்வதேச நிதி நிறுவனங்களும் தாராளமாக நிதி உதவும். அது மட்டுமா? பல வெளிநாடுகளும் ஸ்ரீலங்காவில் மூலதனமிடுவதற்கு முன்வரும்.

இந்த வகையில் சொல்லைச் செயலாக்குவதற்கு தலைவர் பிரபாகரன் அரசுக்குவழங்கிய காலக்கெடு நீடிப்பு ஓர் இறுக்கமான 'பூட்டாகும்''! இந்தப் பூட்டை அவிழ்த்துவிட்டு அரசு வெளிநாட்டு உதவி பெற்று தனது பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தட்டும்!

தமிழீழ விடுதலைப் புலிகள் வெறும் போராளிகள் இயக்கமல்லர்; தமிழர் இராணுவம் மட்டுமல்ல; தேசிய விடுதலை அமைப்புமாகும். அரசியல் காய் நகர்த்தலில் அவர்களை இலகுவில் ஏமாற்ற முடியாது; வெல்லவும் முடியாது. தலைவர் பிரபாகரனின் அரசியல் மதிநுட்பத்தை குறைத்து மதிப்பிடக் கூடாது.

காலக்கெடு நீடிப்பு, அல்லது இரண்டாவது காலக்கெடு, சந்திரிகாவுக்கும் அவரது குழாத்துக்கும் இவற்றை இடித்து உறுதிப்படுத்துகிறது.

# தாயகம் திரும்பிய அகதிகள் திருமலையில் எதிர் நோக்கிய இன்னல்கள்!

## விசாரணை நடக்கும் என்கிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, மார்ச் 30

இந்தியாவில் இருந்து சமீபத்தில் நாடு திரும்பிய அகதிகளுக்கு திருகோணமலை இறங்கு துறையில் இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து விசாரிக்கப்படும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் உறுதி அளித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. இரா. சம்பந்தன் இந்தப் பிரச்சினையை அமைச்சர் பீரிஸிடம் எழுப்பி இருந்தார்.

தமிழகத்திலிருந்து சமீபத்தில் நாடு திரும்பிய அகதிகள் திருகோணமலையில் பல இன்னல்களை எதிர் நோக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத்தில் வைத்து அகதிகளின் பொதிகள வீடியோ பண்ணப் பட்டன.

மற்றும் அகதிகள் கொண்டு வந்த பொதிகளை சுங்க அதிகாரிகள் முகாம் நடுவில் ஒன்றாக குவித்து வைத்திருந்தனர்.

முகாம்களுக்கு வெளியே உள்ள ''லொட்ஜ்'' ஒன்றில் தங்கியிருந்த மோசடிக் கும்பல் ஒன்று பொதிகளை சுங்கத் தீர்வையின்றி வெளியே கடத்தித் தருவதாகக் கூறி அகதிகள் பலரிடமும் பேரம் பேசிப் பணம் பெற்றுள்ளது.

இந்தக் கும்பலுக்கு சுங்க அதிகாரிகள் சிலரும் பொலீஸாரும் உடந்தையாக இருந்தனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

துறைமுகத்தில் நின்ற ஊழியர்கள் சிலர் அகதிகளின் பொதிகளை உடைத்துத் திருடினர் என்று கூறப்படுகிறது

இதற்கு முதல் பல தடவைகள் கப்பலில் அகதிகள் வந்த போதிலும் —

இதனை விட பாதுகாப்புக் குறைந்த இடத்தில் அவர்கள் தங்க வைக்கப்பட்ட போதிலும் — இடம் பெறாத அடாவடித்தனங்கள் ஏன் தற்போது நிகழ்ந்துள்ளன? என்று கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று கேள்வி எழுப்பி உள்ளது. (இ)

## ஜி.சி.ஈ. பரீட்சை முடிவு அடுத்தவாரம் வெளிவரும்

### ஆர்தர் வெதமுல்ல தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

கடந்த டிசம்பர் மாதம் நடந்த ஜி சி ஈ. (சாதாரண) பரீட்சை முடிவுகள் அடுத்த வாரம் வெளியாகும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

பரீட்சை முடிவுகள் தயாரிக்கும் பணி தற்சமயம் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

பரீட்சை ஆணையாளர் நாயகம் இம் மாக இறுதியில் ஓய்வு பெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## சித்த மருத்துவ மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். பல்கலைக்கழக— கைதடி— சித்த மருத்துவ மாணவ மன்றத்தின் 'சித்த மருத்துவம்' மலர் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு கைதடி சித்த மருத்துவ அரங்கில் யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை தலைவர் டாக்டர் எஸ். பவானி தலைமையில் நடைபெறும்.

கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை நூலை வெளியிட்டு வைக்க, முதல் பிரதியை மருத்துவபீடாதிபதி பேராசிரியர் எஸ் வி. பரமேஸ்வரன் பெற்றுக் கொண்டு சிறப்புரை நிகழ்த்துவார்..

ஆசியுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸும், ஆய்வுரைகளை டாக்டர்கள் எஸ். சபாநாதன், எஸ். கிருஷ்ணதாஸ் ஆகியோரும் விசேட உரையை மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு இன்பனும் நிகழ்த்துவர் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ-14)

## பாடசாலைகளில்

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. ந. மகேஸ்வரன் தலைமையில் வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறும்.

முதன்மைவிருந்தினராக தெல்லிப்பளைக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் கலந்து கொள்வார். [ஐ]

## கஞ்சா கலந்த கோப்பி தென் பகுதியில் விற்பனை

கொழும்பு மார்ச் 30

கஞ்சா போதைப் பொருள் கலக்கப்பட்ட கோப்பித் தூள் தென் பகுதியில் விற்பனை செய்யப்படுவதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலும், நாட்டின் பல பகுதிகளிலும் இத்தகைய கோப்பித்தூள் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கோப்பித் தூளில் கஞ்சாவைக் கலந்து விற்பனை செய்து வரும் தீய சக்திகளைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் பொலீஸார் தீவிரமாக இறங்கியுள்ளனர். [ஐ-3]

# தங்கத்துரை விவகாரம்: கூட்டணிக்குள் முறுகல்

கொழும்பு, மார்ச் 30

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க. தங்கத்துரை பதவி விலகும் விவகாரத்தினால் கூட்டணியின் தலைமைப் பீடத்துக்கும், அதன் திருமலைக் கிளைக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தற்சமயம் உள்ள திரு. க. தங்கத்துரை அப்பதவியை ராஜினாமாச் செய்து திரு இ. சம்பந்தருக்கு அப்பதவியை வழங்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும்—

அதன்படி க. தங்கத்துரை பதவி விலக வேண்டும் என்றும்— கூட்டணியின் திருகோணமலைக் கிளைக் கூட்டணித் தலைமைப் பீடத்தை கேட்டிருந்தது.

கட்சித் தலைமையின் ஒப்புதலுடன் செய்யப்படாத அந்த ஒப்பந்தத்தில் தம்மால் தலையிட முடியாது என்று கூட்டணி தலைவர் திரு எம். சிவசிதம்பரம் திருமலைக் கிளைக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதனையடுத்தே கூட்டணித் தலைமைப்பீடத்துக்கும், திருமலைக் கிளைக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியிருப்பதாக தெரிய வந்தது. (ஐ-3)

## பெரியதம்பிக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ் கல்விவலயம் ஒன்றின் கல்விபபணிப்பாளர் செல்வி தி பெரியதம்பி வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்கிறார். இவருக்கான நியமனக் கடிதம் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தது.

செல்வி பெரியதம்பி எதிர் வரும்முதலாம் திகதி தொடக்கம் வடக்கு- கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக பணியாற்றுவார் தமது பதவியைப் பொறுப்பேற்க வென அவர் இன்று திருகோணமலைக்கு புறப்பட்டுச் சென்லார்.

இதனை அடுத்து யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளராக தற்காலிமாக திரு எஸ் சுப்பிரமணியம் கடமையாற்றுவார் என்று தெரிவிக்கப்படுகிறது

# வெளிநாட்டு வேலைப் பணியகம் 10 வருட வரி செலுத்தவில்லை!

10 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அன்று தொடக்கம் இன்று வரை வருமான வரி செலுத்தவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

வருடந்தோறும் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வோரிடமிருந்து பணத்தை அறவிடும்இந் நிறுவனம்—

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருடாந்தம் 15 இலட்சம் ரூபாவினை வருமான வரியாக செலுத்த வேண்டும்.

தற்போது இவ்வாறு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபா வருமான வரி நிலுவையாக உள்ளது.

வெளிநாட்டுவேலை வாய்ப்புப் பணியகத்திற்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டு இருந்த போதிலும் இதுவரை இது பற்றி எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒரு அரசாங்க நிறுவனம் ஆகும்.

இவ்வாறான அரச நிறுவனங்களின் நடவடிக்கைகள் ஏனைய நிறுவனங்களுக்கு பிழையான முன்மாதிரியாக அமையும் என்றும் கூறப்படுகிறது. (இ-5)

## யாழ். சுகாதார நிலைமை குறித்துகொழும்பில் கூட்டம்

யாழ். மாவட்டத்தில் சுகாதார ஊழியர்களின் பற்றாக் குறை மற்றும் சுகாதார செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் ஏற்படும் தடைகளை கண்டறிவதற்கான கூட்டம் யுனிசெவ் ஸ்தாபனத்தினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பதில் யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வி. சிறீகாந்தா, யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். இ. தெய்வேந்திரன், யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் திருமதி கருணாகரன், யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர். சிவராஜா ஆகியோருக்கு கொழும்பில் இருந்து அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (ஐ-4)

## பீஹாரில் ஜனாதிபதி ஆட்சி

புதுடில்லி, மார்ச் 30

பீஹார் மாநிலத்தில்ஜனாதிபதி ஆட்சி பிறப்பிக்கப்பட்டுள்ளது; இது உடனடியாக அமுலுக்கும் வந்து விட்டது.

மத்திய அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில், ராஷ்ரபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா நேற்று முன் தினம் இரவு இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

சட்டப் பேரவைத் தேர்தல் திகதிகள் மாற்றப்பட்டதைத் தொடர்ந்து அரசமைப்பு நெருக்கடி ஏற்படுவதை தடுப்பதற்காகவும் நாளை 31 ஆம் திகதிக்கு முன்பதாக பீஹார் மாநிலத்தின் செலவுக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவும்— ராஷ்ரபதி ஆட்சி பிறப்பிக்கப்படுவதாக, புதுடில்லியில் வெளியிடப்பட்ட அரசு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் இம்மாதம் 15 ஆம் திகதியே பீஹார் சட்டப் பேரவையின் பதவிக் காலம் முடிவடைந்து விட்டது.

ஆனால் இறுதிக்கட்ட வாக்குப் பதிவு நேற்று முன்தினம் தான் நடந்து முடிந்தது.

பீஹார் சட்ட மன்ற பேரவை தேர்தல் வாக்குகளை எண்ணும் பணி நேற்று ஆரம்பமானது. (இ-5)

## நரோமா கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மார்ச். 30

திருகோணமலைக்கும், பருத்தித்துறைக்கும் இடையில் நடைபெறும் 'நரோமா' கப்பல் சேவை எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெற உள்ளது.

அந்தக் கப்பலில் பயணம் செய்ய விரும்புவோர் உடனடியாக செயலகத்தில் பணத்தைச் செலுத்தி ஆசனப்பதிவை மேற் கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் திரு. து வைத்திலிங்கம் கேட்டுள்ளார். (ஒ-3-7)

# மலையக மக்கள் முன்னணியின் மாநிலக் கவுன்ஸிலில் சாத்தியமா?

## சந்திரசேகரனின் கோரிக்கை குறித்து பாலகிருஷ்ணன்

இந்திய வம்சாவழித் தமிழர்களை இலங்கைப் பிரசைகளாக அங்கீகரித்து மலையக மக்களுக்கு தனியான மாநில கவுன்ஸில் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென பிரதி அமைச்சர் சந்திரசேகரன். நீதி மற்றும் அரசமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்துள்ள யோசனை குறித்து பத்திரிகையாளரான திரு. எஸ். பாலகிருஷ்ணன் பி. பி. ஸி. தமிழோசைக்கு அளித்த பேட்டி இங்கு தரப்படுகிறது.

1983ஆம் ஆண்டில் ஈழப் போராட்டத்துக்கு எதிராக இனக்கலவரம் ஆரம்பிக்கப் பட்டபோது ஈழப்போராட்டத்தில் எந்த தொடர்பும் இல்லாத மலையக மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

இந்திய வம்சாவழியினர் செறிவாக வாழும் பகுதிகளில் அவர்களுடைய பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய நடைமுறை தேவை என்று நாம் எண்ணுகின்றோம்.

அந்தக் கால கட்டங்களில் மாவட்ட அபிவிருத்தி சபைகளை அரசு தயார்செய்து கொண்டிருந்தது.

இப்படியான ஓர் அமைப்பு இருக்குமானால் மலையகத்திலே தனியான மாவட்ட சபைகளை அமைப்பது மலையக மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என நாம் நினைத்தோம்.

கொள்கை அடிப்படையிலே, மலையக மக்களும் இலங்கையின் ஓர் இனக்குழுமம் என்ற அடிப்படையை எடுத்துக் கொள்வோமானால் இலங்கை அரசாட்சியிலே அதிகாரத்திலே அவர்களுக்கும் பங்கு இருக்கிறது.

### பரந்து வாழ்கிறார்கள்

ஆனால் நடைமுறையில் ஒரு சிக்கல் இருக்கிறது.

மலையக மக்கள் பத்து லட்சத்துக்கு மேற்பட்டவர்களாக இருந்தாலும் கூட இலங்கையின் நாலா பக்கங்களிலும் பரந்து வாழ்கிறார்கள். செறிந்து வாழ்வதில்லை. அப்படி செறிவாக வாழ்கின்ற ஒரு பகுதி என்றால் நுவரெலியா என்ற சிறிய மாவட்டத்தில் மட்டும் தான்.

அது மட்டுமல்ல அந்த மாவட்டத்தில் வாழ்கின்றவர்களில் தொண்ணூறு சதவீதமானோர் தோட்டத் தொழிலாளர்களாகத் தான் இருக்கிறார்கள்.

தோட்டத் தொழிலாளர்கள் என்று கூறுகின்றபோது கூலிச் சம்பளம் பெறுகின்றவர்கள், உடல் உழைப்பை விற்று வாழ்கின்றவர்கள்.

அவர்களுக்கு சமூக, பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன.

இப்படியான நடைமுறைகளை நோக்கும்போதும் —

தேசிய ரீதியாக நிலவுகின்ற அரசியல் நிலமைகளை ஆராயும் போதும் —

மலையக மக்களுக்கு எதிரான உணர்வுகள் போன்ற பல்வேறு நிலமைகளை அணுகும்போதும் — இப்படியான கோரிக்கைகள் எந்தளவுக்கு மலையக மக்களுக்கு உடனடியாக அமைதியைப் பெற்றுத் தரும் என்று என்னால் கூற முடியாது.

ஆனால் அதற்கு மாற்றுத் தீர்வாக என்னுடைய கோரிக்கை என்னவென்றால் மலையக மக்கள் இன்று சமூக பொருளாதார ரீதியாக ஏனையோருடன் ஒப்பிடும் போது மிகவும் பின் தங்கியவர்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

### சமூக, பொருளாதார நிலைமை

ஆகையால் முதலாவதாக நாம் அவர்களுடைய சமூக பொருளாதார நிலைமைகளை ஏனைய இனக்குழுமங்களின் மட்டத்துக்கு, உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இரண்டாவது அவர்கள் தமது அரசியல் பிரதிநிதித்துவத்தை சரியாக பெறுவதற்கான தேசிய ரீதியான வாய்ப்பை நாம் ஏற்படுத்த வேண்டும். [illegible] மக்கள் இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்ட காலம் முதல் அவர்கள் தேசிய நீரோட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டுதான் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

### 1948 பிரஜா உரிமைச் சட்டம்

1948ஆம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் அவர்களின் பிரஜா உரிமையும், அவர்களின் வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. இது ஒதுக்குதல்களுக்கு இன்னொரு ஊக்கமாக அமைந்து விட்டது. ஏனென்றால் அரசியல் ரீதியான உரிமையை இழந்த பின்பு அவர்கள் அரசியல் வாதிகளாலும் புறக்கணிக்கப் பட்டார்கள்.

எனவே இந்தப் புறக்கணிப்பிலிருந்து இவர்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆகையால் இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள அரசமைப்பு சீர்திருத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் நான் முன்வைக்கும் ஆலோசனை என்னவென்றால், மலையக மக்களின் சமூகப் பொருளாதாரப் பின்னணியை அவதானத்தில் கொண்டு — அவர்கள் இதுவரை புறக்கணிக்கப்பட்டிருந்த அநீதியான நிலைமை அவதானத்தில் கொண்டு— சமூகப் பொருளாதார ரீதியாக ஏனைய இனக்குழுமங்களுடன் தேசிய ரீதியான அபிவிருத்தியை குறுகிய காலத்தில் அடையக் கூடிய ஒரு அதிவேக அபிவிருத்தித் திட்டமொன்று தீட்டப்பட வேண்டும் என்பதே.

அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும்.

அந்த நிர்வாக அமைப்பு அந்தத் திட்டம் சம்பந்தமான ஆலோசனையும் அரசமைப்பிலே அங்கீகரிக்கப் படவேண்டும். அத்துடன் ஒரு கால எல்லையும் நிர்ணயிக்கப்பட்டு அந்தக் கால எல்லைக்குள் மலையக மக்கள் மத்தியில் இனங்காணப்பட்ட சமூக, பொருளாதாரப் பிரச்சனைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இத்தகைய பிரச்சினைகளை சரியான முறையில் இனங்கண்டு மலையக மக்களின் பிரச்சினைக்கான தீர்வை தேசிய நிகழ்ச்சி நிரலிலே ஒரு முக்கியமான அங்கமாக உள்ளடக்க வேண்டும்.

இதன்மூலம் மலையக மக்கள் தேசிய நீரோட்டத்திலே இரண்டறக் கலப்பதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

ஏனெனில் ஏற்கனவே இனவாத முரண்பாடும் மக்கள் மத்தியிலே சந்தேகங்களும் இருக்கின்ற சூழ்நிலையிலே இப்படியான ஒரு பிராந்திய ரீதியாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயல்வது ஒரு பக்கத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தும் மறுபுறத்தில் எந்த விதமான சாதகமான பலாபலன்களையும் கொண்டு வருவதற்கு இடம் இருக்காது என்பதுதான் அனுபவ ரீதியாக நான் முன்வைக்கின்ற கருத்தாகும்.

அமைச்சர்கள் இருக்கின்றார்கள் என்பதற்காக பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற நீதி இலங்கையில் இல்லை.

கடந்த பதினேழு வருடங்களாக ஐ. தே. க. அரசின் ஒரு பிரபலமான அமைச்சராக தொண்டமான் இருந்திருக்கிறார்.

இந்த பதினேழு வருடகால ஆட்சி பற்றி நான் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை பத்திரிகைகளில் எழுதியுள்ளேன்.

தொண்டமான் பதினேழு வருடங்களாக அரசு அதைக் கொடுத்தது இதைக்கொடுத்தது என மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து தன்னை நிலைப்படுத்திக் கொணடிருந்தார்.

ஆனால் இறுதியாக மோதல் ஏற்பட்டபோது அவரே கூறிவிட்டார் நாம் எவ்வளவோ நம்பி இவ் அரசை ஆதரித்தோம். அரசு எங்களுக்கு எதையுமே செய்ய வில்லையென்று. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமாலியாவில் இருந்து கென்யாவுக்குள்

# யானைத் தந்தங்களைக் கடத்திய இலங்கை, அமெரிக்க ராஜதந்திரிகள்!

நைரோபி, மார்ச் 30

ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரியாகப் பணியாற்றும் இலங்கை ராஜதந்திரி ஒருவரும், அமெரிக்க ராஜதந்திரி ஒருவரும் சுமார் முப்பது கிலோ நிறையுடைய யானைத் தந்தங்கள், யானைத் தந்தங்கள் தயாரிக்கப்பட்ட கலைப் பொருள்கள், சிறுத்தைப் புலி ஒன்றின் தோல், மற்றும் பெறுமதி மிக்க பொருள்களைக் கடத்தி வந்தபோது கென்யா நாட்டில் அகப்பட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சோமாலியாவில் செயற்பட்ட ஐக்கிய நாடுகள் படையில் இடம்பெற்றிருந்த இந்த இரு அதிகாரிகளும் சோமாலியாவிலிருந்து திரும்பி கென்யாவில் வந்து இறங்கிய போதே அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ராஜீக விதிவிலக்கு பாதுகாப்பை விலக்கிக் கொள்ளும் படி ஐக்கிய நாடுகள் சபையை கென்யா கோரியிருக்கிறது.

சம்பந்தப்பட்ட தந்தங்கள் மற்றும் பொருள்கள் இருந்த பெட்டிகளை மேற்படி இரு அதிகாரிகளும் நேரடியாக அவர்களே தம்முடன் நைரோபி விமான நிலையத்துக்கு எடுத்து வரவில்லை என்றும்—

மேலும் கென்யா நாட்டு சுங்கப் பகுதியினரின் நியாயாதிக்கத்துக்கு உட்படாத பகுதியில் வைத்தே திறக்கப்பட்டிருப்பதால் சட்டரீதியான வழக்கு எதுவும் தொடரமுடியாது என்றும்—

சோமாலியாவில் செயற்படும் ஐக்கிய நாடுகள் சபைப் பிரிவு தெரிவித்தது.

ராஜீக விதிவிலக்கு பாதுகாப்பைப் பயன்படுத்தி யானைத் தந்தம், காண்டாமிருகக் கொம்பு போன்றவை கடத்தப்படுவதாகவும்—

அதனால் இந்த விடயத்தில் கடும் நடவடிக்கை எடுக்க தாங்கள் வற்புறுத்துவதாகவும்—

கென்ய வனவிலங்கு சேவை இயக்குநர் தெரிவித்தார்.

சர்வதேச ஒப்பந்தச் சட்டங்களின்படி யானைத் தந்தம், காண்டா மிருகக் கொம்பு போன்ற பொருள்கள் தொடர்பான வர்த்தகம் தடை செய்யப்பட்டுள்ளது என்பதும்—

கென்யா நாட்டுக்குள் ஊடுருவி, அங்குள்ள யானைகளைக் கொன்று, அவற்றின் தந்தங்களைக் கடத்தி வருவதன் மூலமே சோமாலியாவுக்கு பெரும்பாலும் தந்தங்கள் கொண்டு வரப்படுகின்றன.

சோமாலியாவில் செயற்படும் ஐக்கிய நாடுகள் சபைப் பிரிவு அதிகாரிகள், ராஜீக விதிவிலக்குகளுக்கு உட்படுவதால் — முன்னரே இணக்கம் ஒன்றைக் காணாமல் — அவர்களுடைய பொதிகளைச் சோதனையிட முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பதில் செயலராக டிவகலாலா

கொழும்பு, மார்ச். 30

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலருமாகப் பணியாற்றிவரும் திரு. சுந்தரம் டிவகலாலா எதிர்வரும் முதலாம் திகதி முதல் மாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளராகப் பணியாற்றவிருக்கிறார்.

தற்போது பதில் செயலாளராகப் பணியாற்றும் திரு. கேதிபாகராஜா சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு விடுமுறையில் செல்வதை அடுத்தே அப்பதவியை திரு. டிவகலாலா ஏற்காவிருக்கிறார்.

இதன் காரணமாக எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வ வேலைகளுக்காக மேற்கொள்ளவிருந்த தமது பயணத்தை திரு. டிவகலாலா ஒத்திவைத்துள்ளார் என்றும் —

அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள கூட்டுறவுத்துறை சம்பந்தமான கலந்துரையாடலில் அவர் பங்குபற்ற மாட்டார் என்றும் —

எதிர்வரும் மே கடைசி வாரத்திலேயே அவர் யாழ்ப்பாணம் வருவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-7)

'ஏயர் லங்கா' நிலுவையைச் செலுத்த

# தொண்டாவின் குடும்பத்தினருக்கு நாளை வரை கால அவகாசம்

கொழும்பு, மார்ச் 30

அமைச்சர் தொண்டமானின் குடும்பத்தவர்கள் ''ஏயர் லங்கா'' நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய ஒரு கோடியே 10 லட்சம் ரூபா நிலுவையைச் செலுத்துவதற்கு, நாளை மார்ச் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப் பட்டிருக்கிறது.

''ஏயர் லங்கா'' நிறுவனத்தின் சென்னை முகவர்களாகச் செயற்பட்டுவந்த தொண்டமான் குடும்பத்தினர், விமான டிக்கெட்டுக்களை வழங்கிய வகையில் மூன்று கோடி 40 லட்சம் ரூபாவை அந்நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டியிருந்தது.

அதில் இரண்டு கோடி 30 லட்சம் செலுத்தப்பட்டதை அடுத்து எஞ்சிய தொகையைச் செலுத்துவதற்கு பெப்ரவரி 28 வரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக கடந்த டிசம்பரில் தொண்டமான் குடும்பத்தவர் வழங்கிய முப்பது லட்சம் ரூபா காசோலையும் கணக்கில் போதிய நிதி இல்லாததால் வங்கியினால் திருப்பி அனுப்பப்பட்டது.

எஞ்சிய தொகையைச் செலுத்துவதற்கு தொண்டமான் குடும்பத்தவர்கள் கால அவகாசம் கோரியதை அடுத்து முழு நிலுவையையும் செலுத்துவதற்கு மார்ச் 31 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நீங்காத நினைவுகள்



அமரர்

### செல்லத்துரை அம்பிகைபாலன்

வான வீதியில்
வலம் வந்த
உடுக்களுக்குள்
வளர்மதியாய்
நீ இருந்தாய்

கானல் நீரினிலே
கரைந்துவிட்ட
சந்தனம் போல்
எம்மை விட்டு
மறைந்ததேனோ?

யா. தொழில் நுட்ப கல்லூரி-
குடிசார் எந்திரவியல் (1994/1995)
மாணவர்கள்.

[8451]

தனியார் மயப்படுத்தலைச் சாடி

# கொழும்பில் நேற்று நடந்த எதிர்ப்புக் கூட்டம்

கொழும்பு, மார்ச் 30

அரச ஐக்கிய தொழிலாளர் சம்மேளனமும், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனமும் இணைந்து நேற்று கொழும்பு ஹைட் பார்க்கில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றை நடத்தின.

தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வங்கி, காப்புறுதி, மின்சாரம், ரெலிகொம், பெருந்தோட்டங்கள் போன்ற பல்வேறு துறைகளிலும் ஆலோசிக்கப்பட்டுள்ள தனியார் மயப்படுத்தல் முயற்சிகளுக்கு எதிராக தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இத்துறைகளைச் சார்ந்தவர்களே நேற்றைய கூட்டத்தில் பெருமளவில் கூடியிருந்தனர்.

இதேவேளை, தனியார் மயப்படுத்தலை ஆட்சேபித்து மின்சார சபையைச் சேர்ந்த ஊழியர்கள் சுமார் 14 ஆயிரம் பேர் நாடெங்கும் இன்று வியாழக்கிழமை அடையாள வேலை நிறுத்தம் செய்யவுள்ளனர். சுமார் 4 மணி நேரம் இந்த அடையாள வேலை நிறுத்தம் இடம்பெறும்.

(ஓ-6)

# பிரதி அமைச்சர் வீடு அருகே கேட்ட வெடிச் சத்தம்!

கொழும்பு, மார்ச் 30

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 2-30 மணியளவில் கொழும்பு கறுவாக்காடு ஹோட்டன் பிளேசில் உள்ள — சுற்றுலா விமானப் போக்குவரத்துத்துறை பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஸவின் — வீட்டுக்கு அருகே பெரும் குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, கறுவாக்காட்டுப் பொலிஸார் அப்பகுதிக்கு விரைந்து சென்றனர்.

அந்தப் பிரதேசத்தைப் பொலிஸார் தீவிரமாக பரிசோதனை செய்ததாகவும் —

ஆனால் குண்டு வெடித்ததற்கான தடயங்கள் ஏதும் அப்பிரதேசத்தில் காணப்படவில்லை என்றும்—

கறுவாக்காட்டு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏதேனும் வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த மேலதிக டயர் வெடித்ததால் ஏற்பட்ட சத்தத்தைக் கேட்ட அயலவர்கள் குழம்பியிருக்கக் கூடும் என்றும் பொலிஸார் கருத்துத் தெரிவித்தனர்.

(உ)

ஒழுங்கீனமான நடவடிக்கை:

# பொலீஸார் 30 பேர் மீது விசாரணை நடக்கிறது

கொழும்பு, மார்ச். 30

சுமார் முப்பது பொலிஸாரின் ஒழுங்கீனமான நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்வதற்காக விசேட பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

சட்ட விரோதமான செயல்களில் ஈடுபட்டது, தமது ஊதியத்துக்குக் கூடிய தொகையை செல்வமாகச் சேர்த்தமை ஆகிய விடயங்கள் தொடர்பாக இவர்களுக்கு எதிராக விசாரணை நடைபெறவிருக்கிறது.

சம்பந்தப்பட்ட முப்பது பொலிசாரில் பலருக்கு எதிராக விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளும் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ)

அரசு-புலிகள்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்துவதற்கு அரச குழு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வசதியான திகதியைத் தெரியப்படுத்தும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிய பிந்திய கடிதத்தில் கேட்டிருந்ததும் —

பேச்சு நடத்த நாளை மறுதினம் முதலாம் திகதி அரச குழுவை அனுப்புமாறு தலைவர் பிரபாகரன் தமது பதில் கடிதத்தில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தெரிவித்திருந்ததும் தெரிந்தவையே.

ஆனாலும் ஜனாதிபதி சந்திரிகா இன்று நாடு திரும்பியதும், உடனடியாக தமது தரப்புப் பிரதிநிதிகளை நாளை மறுதினத்துக்குள் தெரிவு செய்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பது சாத்தியமானதல்ல என்று கருதப்படுகின்றது.

வடக்கே பேச்சுக்கு வரும் குழு, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான விடயங்களிலும், அது தொடர்பாக அரசு வழங்கிய வாக்குறுதிகள் சம்பந்தமாகவும் முடிவு எடுக்கும் அதிகாரமுடையவர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று தலைவர் பிரபாகரன் தமது கடிதத்தில் வலியுறுத்தியிருப்பதால் அரசின் உயர்மட்டக் குழு ஒன்றையே ஜனாதிபதி சந்திரிகா தமது பிரதிநிதிகள் குழுவாக அனுப்ப வேண்டியிருக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஏற்கனவே முன்னைய சுற்றுப் பேச்சுக்களில் அரசுத்தரப்புக் குழுவின் தலைவராக வந்த, ஜனாதிபதியின் செயலாளர் குசும்சிறி பாலபட்டபென்டி, சமாதான முயற்சிகள் தொடர்பாக கொழும்பில் வெளியிட்ட கருத்துக்கள் புலிகள் மத்தியில் அதிருப்தியைத் தோற்றுவித்திருப்பதாலும்—

அரசு — புலிகள் தரப்பு கடிதப் பரிமாற்றங்களின்போது அவரின் நிலை குறித்து விமர்சிக்கப்பட்டிருப்பதாலும்—

அடுத்த சுற்றுப் பேச்சுக்கு அவரை அனுப்புவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தவிர்க்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முடிவு எடுக்கும் அதிகாரமுடையவர்கள் என்ற நிலையை வெளிப்படுத்துவதற்காக அடுத்த சுற்றுப்பேச்சுக்கு அமைச்சர் ஒருவரை அல்லது சிலரை சந்திரிகா யாழ்ப்பாணம் அனுப்பக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# வவுனியாவில் மற்றொரு சோதனை நிலையம்

கொழும்பு, மார்ச். 30

வடக்கே எடுத்து வரும் பொருள்களை சோதனை செய்வதற்காக வவுனியாவில் மேலும் ஒரு சோதனை நிலையம் அமைக்கப் பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கே வரும் லொறிகள் வவுனியா ஈரப்பெரிய குளத்தில் உள்ள சோதனை நிலையத்திலேயே இது வரை காலமும் சோதனை செய்யப்பட்டு வந்தது.

அண்மையில் மதவாச்சி பகுதியிலும் சோதனை நிலையம் ஒன்று திறக்கப்பட்டிருந்தது.

தற்சமயம் வவுனியாவில் மற்றுமொரு சோதனை நிலையம் திறக்கப் பட்டுள்ளதாகவும்—

புத்தாண்டை யொட்டி தினமும் 110 லொறிகள் வடக்கே அனுப்ப நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் — கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஓ-3)

# காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாக். தலைவர்கள் ஆதரவு

இஸ்லாமாபாத், மார்ச் 30

இந்தியாவில் அரசுக்கு எதிராக போராடி வரும் காஷ்மீர் தீவிரவாதிகளுக்குத் தமது ஆதரவை வழங்குவோம் என்று பாகிஸ்தான் அரசும் எதிர்க்கட்சிகளும் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சிகளும் இணைந்து ஒருமைப்பாடாக தீவிரவாதிகளுக்கு கை கொடுக்க முன்வந்துள்ளன.

இதற்கான ஒருமைப்பாட்டு ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ, எதிர்க் கட்சித் தலைவர் நவாப் ஷெரிப் உட்பட அரசியல் கட்சிகளினதும், குழுக்களினதும் 16 தலைவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

நாடாளுமன்ற காஷ்மீர் குழுத் தலைவர் நவாப் ஸாடா நஸ்ருல்லாகான் இத்தகவலை வெளியிட்டார்.

இந்த ஒருமைப்பாட்டு ஒப்பந்தத்தின் மூலம் நீண்டகால காஷ்மீர் பிரச்சினையின் முக்கியத்துவம் உலகுக்கு எடுத்துக் கூறப்படும் என்றார். அவர்.

ஜம்மு — காஷ்மீர் மக்கள் சுதந்திரத்துக்காக நடத்தி வரும் போராட்டத்திற்கு முற்று முழுதான ஆதரவை வழங்குவதே இந்த ஒருமைப்பாட்டு பிரகடனத்தின் நோக்கம் என்று தெளிவாக்கப்பட்டுள்ளது.

(ஓ 14)

## வடபகுதிக்கு பாத யாத்திரை

கொழும்பு, மார்ச் 30

அம்பாறையில் இருந்து வடபகுதிக்கு சமாதான யாத்திரை ஒன்றை அடுத்த மாதத்தில் நடத்த ஏற்பாடு நடந்து வருவதாக தெரியவருகிறது.

[ஓ-4]

பாதிக்கப்பட்ட---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லிங்கம் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம், ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உப — தலைவர் பேராசிரியர் பத்மநாதன் ஆகியோரைச் சந்தித்து தமது நிலையை விளக்கினர்

(அ-9-3)

யாழ். மாணவரின்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்குமாறு எல்லா மாவட்டங்களில் இருந்தும் கோரிக்கைகள் கிடைத்துள்ளன — யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டும் அந்தக் கோரிக்கை வரவில்லை—

இது விடயம் சட்டமா அதிபரின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது —

யாழ்ப்பாண மாணவர்களின் வெட்டுப் புள்ளியை மட்டும் நாம் குறைக்க விரும்பவில்லை. அப்படிச் செய்வது தவறு—

இந்த மாணவர்கள் மிகவும் கஷ்டமான, வசதி குறைந்த சூழ்நிலையில் பயின்றிருந்தாலும் அவர்களுக்கு மட்டும் புறம்பான கோட்டா வழங்க முடியாது — என்றும் திரு. அத்துலத் முதலி கூறியிருக்கிறார்.

இதேவேளை, தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் கொழும்பு வந்த பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரதிநிதிகள் குழு—

தமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்வரை கொழும்பிலிருந்து திரும்பிச் செல்லப் போவதில்லை என்று தெரிவித்துள்ளனர். இந்தப் பிரதிநிதிகள் குழுவில் எட்டுப்பேர் அங்கம் வகிக்கின்றனர்

(அ)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி கனகராஜர்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த இளையதம்பி கனகராஜர் நேற்றிரவு காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், சாரதாம்பாளின் அன்புக் கணவரும், இருஸ்ணலீலா, சந்திரலீலா, வசந்தலீலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரக்குமார் (சவுதி), குலேந்திரன் (காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மாமனாரும், ஈகன், றொபின், றெஜினி, செறோன், தபோதினி, ராகுலன், விலாசினி, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சிவரத்தினம், அன்னபூரணம், நடராசா மற்றும் செல்வநாயகியின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, குலநாயகத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்,
ச. ஈகன் (பேரன்)

அல்லணி,
சண்டிலிப்பாய்.

(35960)

### கந்தையா குமரேசு

(முன்னாள் உரிமையாளர், கணநாத ஸ்ரோர்ஸ் அநுராதபுரம்)

தும்பளை - பருத்தித்துறையைச் சேர்ந்த கந்தையா குமரேசு (முன்னாள் உரிமையாளர், கணநாத ஸ்ரோர்ஸ், அநுராதபுரம்) நேற்று இரவு சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், இரத்தினம், கனகசுந்தரம் [முன்னாள் கணக்காளர்- இலங்கை மின்சார சபை, அநுராதபுரம்), துருவசோதி, சதாசிவம் (படவரைஞர் ஓமான்), பாக்கியலெட்சுமி, பஞ்சாட்சரம் [நில அளவையாளர்- புருணி] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை [சோதிடர்- ஆசிரியர்) மற்றும், கமலாம்பிகை, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி [பிரதம எழுதுவினைஞர்], மற்றும் சரோஜாதேவி, சிவஞானசுந்தரம் [ஆசிரியர்- புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயம்], விலோசனா ஆகியோரின் அன்புமாமனாரும், கமலாம்பிகை [ஆசிரியை], செந்தில் வேற்பிள்ளை (ஓமான்), மாலதி [பிரான்ஸ்], குமாரயோகேசன் (ஓமான்), குமாரதாஸன், திருமகள், ஜெயசிறி [யாழ். பல்கலைக் கழகம்]. ஜெயசோதி, ரேவதி, சுபாசினி, ரோகிணி, குமுதா, ஸ்ரீகாந், குமணன் வைதேகி, வனஜா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-3-95) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
க. யோகேசன்
(பேரன்)

பிராமண வீதி,
தும்பளை,
பருத்தித்துறை.

(35961)

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின்
54 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படும்
அஞ்சலோட்ட விழா
ஏப்ரல் 8, 9 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்
பாடசாலை கழக அணிகள் விண்ணப்பிக்க இறுதித் தினம் 01 - 04 - 95
விண்ணப்பப்படிவங்களைப் பெற:-
செயலாளர்,
யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்
292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30 - 03 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org